# விடுதலைப்புலிகள்

குரல் : 54 | மாசி - 1995 | அன்பளிப்பு : ரூபா 5/-

# எவ்வகையான தீர்வுத் திட்டத்தை புலிகள் இயக்கம் எதிர்பார்க்கின்றது

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் நோக்குடன் சந்திரிகா அரசு ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து வருகின்றது. அத்திட்டத்தை விரைவில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப் போவதாகவும், அரசு கூறியுள்ளது.ஆனால், அத்தீர்வுத்திட்டம் எத்தகைய அரசியல் வடிவத்தைக் கொண்டது? எவ்வித அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்ற விபரங்களை அரசு வெளியிடவில்லை.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியம் என்ன என்பது, எல்லோருக்கும் நன்கு தெரியும். சுதந்திர - இறைமையுள்ள - தனியரசான தமிழீழம் தான் அது. ஆயினும், தமிழ் மக்களின் சுயாட்சியை - பாதுகாப்பை - கௌரவத்தை உறுதிசெய்யும் ஒரு உருப்படியான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலனை செய்வதாக, புலிகள் இயக்கம் ஏற்கெனவே அறிவித்துள்ளது. இத்தகைய தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்க வேண்டும்.

தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்போது, பின்வரும் விடயங்களை அரசு கட்டாயம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். முதலில், தமிழரின் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருத வேண்டும்; தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்; தமிழ் மக்களின் தேசிய தாயகபூமியை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை, தமிழினத்திற்கு தேசிய சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரித்து, இவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

இத்தகையதொரு தீர்வுத்திட்டம் எத்தகைய அரசியல் வடிவத்தில் இருக்கவேண்டும் என்று புலிகளின் தலைமைப்பீடம் ஏற்கெனவே சில யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

அதாவது, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் மாநில சுயாட்சியுடைய சமஷ்டி அமைப்பொன்றை அரசு முன்வைக்கவேண்டும். அரசு முன்வைக்கவிருக்கும் தீர்வுத்திட்டம் அத்தகைய வடிவத்தில் இருந்தால், அதைச் சாதகமான முறையில் பரிசீலனை செய்வதாக, புலிகள் கூறியுள்ளனர்.

தேசியம், தாயகம், தன்னாட்சி - இம்மூன்று அரசியல் உரிமைகளும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே, 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற திம்பு மாநாட்டிலிருந்து புலிகள் இயக்கம் முன்வைத்துவரும் அரசியல் கோரிக்கைகளாகும்; அதைத் தற்போதைய அரசு கருத்தில் எடுக்கவேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் மாகாணசபை தீர்வுத்திட்டத்தை, புலிகள் 1987 ஆம் ஆண்டே நிராகரித்துள்ளனர் என்பதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேவேளை, தீர்வுத்திட்டம் என்ற பெயரில், தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்கும் அரைகுறைத் திட்டங்களைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது!

## உள்ளே


* பூநகரிப் படை முகாம் அகற்றப்பட வேண்டும் - விளக்கம்
* பண்டா - செல்வா உடன்படிக்கை - ஆய்வு
* கந்தளாய் குடியேற்றத்திட்டம் - தகவல்
* நீக்கியும் நீங்காத தடைச் சட்டங்கள் - நிலைமை
* லெப் கேணல் லக்ஸ்மணன் - குருதிச் சுவடுகள்
* செச்சினிய விடுதலைப் போர்
* இந்திய அரசியல் நெருக்கடி - கண்ணோட்டம்
* பூநகரிப் பாதையின் பூட்டுகளைத் திறவுங்கள் - கவியுரை
* புலி வீரர்களின் நெஞ்சத்து உறுதி - வரலாறு




தேசத்தின் தலைவருடன் தென்தமிழீழத் தளபதிகள்

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுடன் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் தளபதி ராம், துணைத்தளபதி லெப்ரினன்ற் கேணல் லக்ஸ்மணன் ஆகியோர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

# பேச்சுவார்த்தை முயற்சியில் சந்திரிகா அரசு காட்டும் அசமந்தப் போக்கு

மிகப்பெரிய நம்பிக்கையுடன் தொடங்கப்பட்ட அரசு - புலிகள் பேச்சுவார்த்தை, இப்போது மனச்சோர்வை அளிக்கும் விதத்தில் மந்தகதியில் நடந்துகொண்டிருக்கின்றது. பேச்சுவார்த்தை முயற்சியில் சந்திரிகா அரசு காட்டும் அககறையீனமும் - தாமதப் போக்கும்தான் அதற்குக் காரணம்.

சிங்களப் படைகளுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையில் மோதல் தவிர்ப்பு அமுலில் இருந்துவரும் கடந்த நான்கு மாத காலகட்டத்தில், மூன்றே மூன்று சுற்றுப் பேச்சுக்கள் மட்டுமே நடந்து முடிந்துள்ளன. இந்த மூன்று கட்டப் பேச்சுக்களும் சமாதான விரும்பிகளான தமிழ் மக்களுக்குக் கொடுத்த சன்மானமாக, பொருளாதாரத்தடையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறு தளர்வைத்தான் குறிப்பிட முடியும். அந்தத் தளர்வை அமுல்படுத்தும் அதிகாரம் தாண்டிக்குளத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் மனோநிலையில்தான் தங்கியுள்ளது என்பது, கசப்பான உண்மை. தாண்டிக்குளம் ஊடாகப் பயணம போய்வரும் தமிழ் மக்கள் இதை அனுபவவாயிலாகக் கண்டு சொல்கின்றார்கள்.

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி, கடல்வலயச் சட்டத்தை அகற்றி, போக்குவரத்திற்கு ஒரு பாதையைத் திறந்து, சமாதான முயற்சிக்கு வலுச்சேர்க்குமபடி புலிகள் விடுத்துவரும் வேண்டுகோள்கள், 'செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல' பயனேதும் இலலாமல், தொடர்ந்தும் இருந்துவருகின்றன. போரால் சிதிலமாகிப்போயுள்ள ஒரு பிரதேசத்தில் புனர்நிருமாண வேலைகள் செய்யப்போவதாக அறிக்கைமேல் அறிக்கை விடும் அரசு, அந்த புனர்நிருமாண வேலைகளுக்கு அடிப்படைத் தேவைகளான எரிபொருளையும், தரைப்பாதையையும் முழுமையாகவே தடுத்து வைத்திருக்கின்றது.

சமாதானத்திற்கான ஆணைகேட்டு அதற்கு மக்கள் கொடுத்த ஏகோபித்த ஆதரவைககொண்டு ஆட்சிபீடமேறிய சந்திரிகா அமமையார் இப்போது, அந்த மக்கள் தீர்ப்பைப் புறககணித்து வருவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

போர் நடைபெற்ற முன்னைய ஆண்டை விட, சமாதான ஆண்டாகிய இந்த ஆண்டில் பாதுகாப்பு செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில், 100 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை அரசு ஒதுக்கியதானது, தமிழ் மக்களிடம் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது; அதேவேளை, படைபலத்தைப் பெருக்கும் வகையில், புதிதாக படைக்கு ஆள் சேர்க்கும் வேலைகள் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றன என்ற ஆதாரபூர்வமான செய்திகளும், தமிழ் மக்களின் சந்தேகத்திற்கு வலுச் சேர்க்கின்றன.

இதேவேளை, எந்தவித ஆதாரங்களுமில்லாமல், புலிகள் இயக்கத்தின்மேல் அவநம்பிக்கைக் கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அள்ளி வீசுவதும், ஆரோக்கியமான விடயமாகத் தெரியவில்லை; அது ஆழ்ந்த வருத்தத்தையே ஏற்படுத்துகின்றது.

பிரான்சுப் பத்திரிகையான லா மொண்ட்இற்கு சந்திரிகா அம்மையார் அளித்த செவ்வியில் தெரிவித்த, "மோதல் தவிர்ப்பு உடன்பாட்டால் புலிகள் இயக்கமே நன்மை அடைந்துவருகின்றது" என்ற தேவையற்ற கருத்தும்; வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது, "புலிகள் யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு முகாம்களை அப்புறப்படுத்தும்படி நிபந்தனை விதிக்கின்றார்கள்" என்று குறிப்பிட்ட திரிக்கப்பட்ட கருத்தும், சமாதானத்திற்கான பாதையில் ஒரு நல்ல அறிகுறியாகத் தென்படவில்லை. "நாங்கள் இரண்டு கப்பல் உணவை அனுப்பினோம்; அதற்குப் பதிலாக புலிகள் நான்கு பொலிசாரை மட்டும்தான் விடுவித்தனர்" என்ற சிறுபிள்ளைத்தனமான அறிக்கைகளும், சமாதான சூழலை உருவாக்கஉதவமாட்டா.

அரசியல் விமர்சகர் பலர் கூறுவது போல, இந்தக் கருத்துக்கள் சந்திரிகா அம்மையாரின் அரசியல் அனுபவமின்மையை வெளிப்படுத்துகின்றனவா? அல்லது அவரின ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் பேரினவாத சிந்தனையைக் காட்டுகின்றனவா?

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தமிழரின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல்தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவே இருக்கின்றது; அவ்வாறானதொரு சமாதானத்தீர்வைக் காண்பதற்கேற்ற நல்லதொரு அரசியல் சூழல் இப்போது நிலவுகின்றது என்றும், புலிகள் நம்புகின்றனர்.

எனவே, சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களும் இலங்கையின் பிரசைகள்தான் என்று அரசு ஏற்றுக்கொண்டால், தமிழ் மக்களுக்கு எதிராக முன்னைய அரசால் இடப்பட்ட பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி, கடல் வலயச் சட்டத்தை அகற்றி, வடமாகாண மக்களுக்கான - பாதுகாப்பான - ஒரு பிரயாணப் பாதையைத் திறந்து, சமாதானப் பாதையில் உறுதியுடன் கால்பதிக்கும் வண்ணம் சந்திரிகா அரசைக் கேட்டுக் கொள்கின்றோம்.

# கிழக்கு மாகாணமும் மோதல் தவிர்ப்பு உடன்பாடும்

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களைப் பொறுத்தளவில், மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அப்பால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த, இராணுவம் முயல்கின்றது. இதுகாரணமாக கிழக்கில், பல உடன்பாட்டு மீறல்களை இராணுவம் புரிந்துள்ளது.

அரசு - புலிகள் செய்துகொண்ட மோதல் தவிர்ப்பு உடன்பாட்டில் "ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது; ஆனால், எந்த ஒரு தரப்பும் ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று உடன்பாடு சொல்லவில்லை.

ஆனால், தனது படையினர் ஆயுதம் தாங்கியபடி நிற்க, புலிவீரர்கள் ஆயுதங்கள் எதுவுமின்றி செல்லவேண்டும் என இராணுவம் வற்புறுத்துகின்றது. அதுமட்டுமல்ல, "வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்து அஞ்சலிக் கூட்டங்களை நடாத்தக்கூடாது", "அரசியல் வேலைகள் எதிலுமே புலிவீரர்கள் ஈடுபடக்கூடாது" என்றும் உடன்பாட்டிற்கு மாறாக, அங்கே. இராணுவம் நிபந்தனை விதித்துள்ளது. இத்துடன் நின்றுவிடவில்லை; நிராயுதபாணிகளாகச் செல்லும் புலிவீரர்களை, வீதிச் சோதனை என்ற பெயரில் நடுவீதியில் வைத்து உடற்சோதனை செய்து, கேலிப்பேச்சுக்கள் பேசி அவமரியாதை செய்தும் வருகின்றது.

பிரேமதாசா அரசுடனான போர் நிறுத்தம் முறிவடைவதற்கு, கிழக்கில் அரசுப்படைகள் செய்த அத்துமீறிய செயற்பாடுகளும் ஒரு காரணம் என்பது வரலாறு. இவ்வாறுதான் அன்றைய போர்நிறுத்தத்தின் போதும். சுத்தம் வீடுகளுக்குச் சென்ற புலிவீரர்களை, வீதிச் சோதனை என்ற பெயரில் தொல்லைப்படுத்திய நிகழ்ச்சிகள் ஏராளம் நடந்துள்ளன.

இவ்விதமானதொரு தொல்லைப்படுத்தல், அம்பாறை மாவட்டத்தின் வளத்தாப்பிட்டி சோதனைச் சாவடியில் இடம்பெற்றபோது, அந்த அவமானம் தாங்கமாட்டாது, இரண்டாவது லெப் தரணி என்ற போராளி, அவ்விடத்திலேயே சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார் என்பது, இங்கு நினைவுகூரத்தக்கது. இந்தச் சம்பவம், அப்போது புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே முறுகல் நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இப்போதும் அதேபோன்ற வீதிச் சோதனைகள் நடாத்தப்படுவதும் ஒவ்வொரு சாட்டுக்கூறி, வீதியால் போகும் புலிவீரர்களைக் கைது செய்து - பின்னர் விடுவிப்பதும், கிழக்கில் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது.

இதேவேளை, 23.01.1995 அன்று, புலிவீரர்களின் ஒரு சிறு குழுவொன்றை வாழைச்சேனையில் வைத்துக் கைதுசெய்த படையினர், அவர்களது ஆயுதங்களையும் பறித்தெடுத்துள்ளனர். மாதம் ஒன்று கடந்த நிலையிலும், பறிக்கப்பட்ட அந்த ஆயுதங்கள் புலிவீரர்களிடம் இதுவரை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. இந்தச் சம்பவம் கிழக்கில் ஒரு பதற்றநிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆயுதப் பறிப்பு, அப்பட்டமான ஒரு மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு மீறல் சம்பவமாகும்; அத்துடன் இது ஒரு ஆத்திரமூட்டும் செயல் என்பதிலும் ஐயமில்லை. மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலிலுள்ள இந்த வேளையிலும்கூட, கிழக்கில், கிராமச் சுற்றி வளைப்புகள், கைதுகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள் என்பன இடையிடையே இராணுவத்தால் நடாத்தப்பட்டு வருகின்றன.

படையினரின் இத்தகைய அடாவடித்தனங்களைப் பட்டியலிட்டு, அரசுதரப்பு பிரதிநிதிகளின் தலைவர் திரு பலபட்டபெண்டிக்கு அறிவித்தும், இதுவரை ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கிழக்கில் இவ்விதம் இராணுவ தர்பார் நடாத்தப்படுவதற்கு, ஒரு அரசியல் காரணமும் உண்டு. அதாவது, 'கிழக்கு மாகாணம் தமிழர்களது நிலப்பரப்பல்ல; அது சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள சிங்களவர் பூமி' என்ற எண்ணத்தைத் தமிழர்களிடம் நிலைநிறுத்த முனையும் ஒரு 'அரசியல் - உளவியற் செயற்பாடே' அதுவாகும். கிழக்கு மாகாணம் தமிழர்களது நிலமா? அல்லது சிஙகளவர்களின் பூர்வீக மண்ணா என்றொரு விவாதம், இப்போது, கொழும்பில் கொடிகட்டிப்பறக்கின்றது.

தமிழர் தாயகத்தின் பிரிக்கமுடியாத பகுதியாகிய கிழக்கு மாகாணத்தை விவாதங்களின்மூலம் கைப்பற்ற, சிங்களப்பேரினவாதப் புத்திஜீவிகள் கங்கணங்கட்டிக்கொண்டு, தொண்டை அடைக்கும்வரை கத்தியும் - பேனாமுனை தேயும்வரை எழுதியும் வருகின்றனர் இது வெறுமனே இனவாத புத்திஜீவிகளின் கொள்கை நிலைப்பாடு மட்டுமலல; முன்னைய அரசு இக்கொள்கையை நடைமுறைப்படுத்தவே, கிழக்கில், கோரமான வடிவத்தில் ஒரு தமிழ் இன அழிப்பைச் செய்தது. அதையே இப்போதும் தக்கவைத்துக்கொள்ள இராணுவம் பாடுபடுகின்றது.

அப்படியானால், புதிய அரசின் நிலைப்பாடு என்ன?

# ஏன் பூநகரி இராணுவத்தளம் அகற்றப்படவேண்டும்?

வடதமிழீழ மக்களுக்கான போக்குவரத்துப் பாதை மட்டுமல்ல, அரசு – புலிகள் பேச்சு வார்த்தைப் பயணமும் பூநகரி இராணுவ முகாமால் தடைப்பட்டிருக்கின்றது.

பூநகரி முகாமை முழுமையாகவே அகற்றினால்தான் மேற்குறித்த இரு விடயங்களும் தங்குதடையின்றி நடைபெறும் என்பதே. இன்றைய யதார்த்தமாகும்.

பூநகரி முகாம் அகற்றப்பட்டே தீரவேண்டும் என்பதில் புலிகள் இயக்கம் விடாப்பிடியாகவும் – உறுதியாகவும் இருப்பதற்கு, தமிழீழத் தேசியத்தின் நோக்குநிலையிலிருந்து, வலுவான காரணிகள் இருக்கின்றன. அதேபோல, அகற்றப்படக்கூடாது என்பதில் சிங்கள இராணுவத் தலைமை உறுதியாக நிற்பதற்கும் சில காரணிகள் உண்டு.

வடதமிழீழம் மீதான ஒரு இராணுவ வெற்றி பற்றிய கனவுக்கு, அல்லது இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், குடாநாட்டை ஏப்பம்விடத் துடிக்கும் சிங்கள இராணுவவாதிகளின் பேராசைக்கு பூநகரி இராணுவ முகாம் இன்றியமையாதது. தமிழ் மக்களை இராணுவ பலம்கொண்டு அடக்கியாளும் பேரினவாத சித்தாந்தமே இது என்பது, சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. இந்தப் பேரினவாத நிலைப்பாட்டை, பேச்சுவார்த்தை நடைபெறும் இந்தச் சூழலிலாவது விட்டுக்கொடுக்கச் சந்திரிகா அரசு தயாராக இல்லாமல்இருப்பதுதான், தமிழினத்துக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

எழுந்தமான அரசியற்பார்வையுடன் பூநகரிப் பாதை விடயத்தை அலசிப் பார்க்க முனையும் ஒருவருக்கு, சந்திரிகா அரசின் நிலைப்பாடு நியாயமாகத் தென்படலாம். பாதையிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு இராணுவம் தள்ளி நிற்பதுடன், பிரயாணிகளைச் சோதனையிடவும் மாட்டாது என்ற அரசின் நிலைப்பாடு, ஒரு நடுநிலைமையான அல்லது நேர்மையான விட்டுக்கொடுப்பாகத் தென்படலாம். ஆனால் பாதை விடயத்தை இராணுவ பரிமாணத்தில் வைத்துப் பார்க்கும்பொழுது, சிங்கள அரசின் நோக்கத்தையும் – அது தமிழினத்துக்கு எத்தகைய ஆபத்தைக் கொடுக்கும் என்பதையும் காணமுடியும். ஈழத் தமிழினத்தின் பாதுகாப்பையும் அதன் அரசியல் எதிர்காலத்தையும் கருத்தில்கொள்ளும் எவரும், ஒரு போரியல் பார்வை இல்லாமல் அவற்றை எடைபோட முடியாது; அவ்விதம் எடைபோடவும் கூடாது. இந்த அளவுகோல் இன்றைக்கு மட்டுமல்ல, தமிழினத்துக்கு என்றைக்குமே தேவையானது.

இரண்டாம் ஈழப்போரில் – வடக்கு, கிழக்கு என்று இரு வேறு நிலப்பரப்பில் – சிங்களப் படைத் தலைமை, இருவேறு போர்முறைத் திட்டங்களை அமுல்படுத்தி போராட்டத்தை நசுக்க முயன்றது. கிழக்கை முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, படுகொலைகள்– பாலியல் வன்முறைகள் – பொருளாதார நாசங்கள்மூலம், இனப்படுகொலை செய்து கிழக்கைச் சிங்கள மயப்படுத்துவது ஒரு போர்முறைத் திட்டம். அடுத்தது, முற்றுகைப் போர்முறை ஒன்றின்மூலம் வடதமிழீழத்தை ஆக்கிரமிப்பது. இதில் குடாநாடு மீதான இராணுவ – பொருளாதார முற்றுகை முக்கிய இடத்தை வகிக்கின்றது. குடாநாட்டுக்கான சகல தரைப் பாதைகளையும் மூடி இராணுவ முற்றுகைக்குள் அதை வைத்து, பின்னர் அதை ஆக்கிரமித்து வெற்றிகொள்வதுதான் அத்திட்டம்.


கடலோடு ஆறு சங்கமிக்கும்கழிமுகப் பகுதியில் ஒருதடுப்புச் சுவரைக் கட்டிவிட்டு, ஆற்றைக் கலக்கி, அங்குள்ள மீன்கள் எல்லாவற்றையும் கோலி அள்ளும் ஒரு நாசகாரத் திட்டம். அது அந்தவகையில், வன்னிப் பெருநிலப் பரப்புடன் குடாநாட்டை இணைத்து வைத்திருக்கும் வாசல்களை (கொம்படி, பூநகரி) இழுத்து மூடிவிட்டு, குடாநாட்டைக் கலக்கி புலி பிடிப்பதுதான் வடதமிழீழம் மீதான போர் முறைத் திட்டத்தின் மைய இலக்கு; எனினும் சிங்களப் படை நடாத்திய குடாநாடு மீதான முற்றுகைப் போரை புலிப்படை முறியடித்து விட்டது. ஆயினும், தமது முன்னைய முற்றுகைப் போர் முறைத் திட்டத்தை சிங்களப் படைத் தலைமை இன்னமும் கைவிடவில்லை; அதை மீண்டும் முயற்சித்துப் பார்ப்பதற்கான தருணத்தை அது எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது; அதற்காகத்தான் பூநகரி முகாமைக் கைவிட படைத் தலைமை விரும்பவில்லை. எனவேதான் வருமுன் காக்கும் நோக்கத்துடன், பூநகரி முகாமை அகற்றிவிடுவதில் புலிகள் இயக்கமும் உறுதியாக இருக்கின்றது.

பாதையிலிருந்து 600 மீற்றர் உள்ளே இராணுவம் தள்ளி நிற்பதால் பிரயாணம் தங்குதடையின்றி நடைபெறும் என, மக்கள் எண்ணக்கூடும். ஆனால் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு அரசு மீண்டும் போரைத் தொடங்கும்போது, 600 மீற்றர் முன்னே வந்து மீண்டும் பாதையைப் பிடிக்க, இராணுவத்திற்கு 6 செக்கன்களே போதுமானது. அப்படி ஒரு நிலை வந்தால் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதுபோல, மீண்டும் எமது மக்கள் ஒல்லித் தேங்காய்களுடனும், வெற்றுக் 'கான்' களுடனும் கிளாலிக் கடலூடாகத்தான் மாரடிக்க வேண்டி வரும்! இது எமக்குத் தேவையா? ஆகவே, குடாநாட்டு மக்களுக்கு ஒரு நிரந்தரப் பாதை கிடைக்க வேண்டுமாயின், அதற்குப் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டே தீரவேண்டும்.

'யாராவது ஒரு பகுதி விட்டுக்கொடுத்தால்தானே சமாதானப் பேச்சு முன்னோக்கிச் செல்ல முடியும்? நீங்கள் (புலிகள்) கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் என்ன?' என்று கேட்க விரும்புபவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். விட்டுக்கொடுப்பு என்பது சமரச முயற்சிக்குக் கட்டாயம் தேவை என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆனால், எதில் விட்டுக்கொடுப்பைச் செய்வது என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். தமிழினத்தின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய முடியாது; அது எமது கழுத்தை நாமே திருகுவதற்கு ஒப்பாகும். பூநகரிப் பாதை வடதமிழீழ மக்களின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது – அவர்களின் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்டது. உனது தொண்டையில் எதிரி வைத்த கையை 'இருந்துவிட்டுப் போகட்டுமன்' என்று விட்டு வைத்தால், உன் உயிருக்குத்தான் ஆபத்தாக முடியும்!

'அப்படியாயின், யூ. என். எச். சி. ஆர். உடனான சம்பாஷணையின்போது பூநகரி முகாம் அகற்றப்படாமலேயே பாதையைத் திறக்கப் புலிகள் இயக்கம் உடன்பட்டிருந்ததே, அது ஏன்?' என்ற கேள்வியும் இந்த இடத்தில் எழுவது நியாயமே.

அப்படிக் கேட்டும் அப்போதைய அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை, எமது மக்கள்கவனத்தில்எடுக்க வேண்டும். அதேவேளை, அப்போதைய புறச்சூழலையும் சமாதானப் பேச்சுக்கு அரசு உடன்பட்ட இப்போதைய புறச்சூழலையும் கருத்தில்



எடுத்தால், இக்கேள்விக்கு விடை தேடுவது எளிதாக இருக்கும்.

குடாநாட்டைச் சூழ ஒரு இராணுவ, பொருளாதார – உணவு – மருத்துவ – முற்றுகையை இட்டுவிட்டு,வான் வழியே வந்து அழிவுகளைத் தூவிக்கொண்டு இருந்த காலம் அது. இன்றிருப்பவர் நாளை இருப்பாரா என்று உறுதி கூற முடியாத காலம் அது. நாகதேவன் துறையில் நிலைகொண்டிருந்தகடற்படைப் பூதம், எஞ்சியிருந்த ஒரேயொரு பாதையால் பயணம் சென்றுகொண்டிருந்த படகுப் பயணிகளை விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருந்த சோக காலம் அது. உணவும் இன்றி......எதுவும் இன்றி ... குடாநாட்டு மக்கள் ஏங்கிய அந்த வேளையில், இராணுவம் இருக்கக்கூடியதாகவே பூநகரி பாதைதிறப்பை புலிகள் சாதகமாகப் பரிசீலனை செய்தார்கள் என்பதும் உண்மையே. மக்களின் அவலம் கருதி – அவர்களின் அவசிய தேவை கருதி– புலிகள் இயக்கம் எடுத்த முடிவு அது. தமிழ் மக்கள் அனுபவித்த அந்த அவலநிலையிலும்கூட அரசு பாதை திறப்புக்கு இணங்கவில்லை. ஏனென்றால், குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்பு எசமானர்கள் (இராணுவம்) பாதையில் நிமிர்ந்து நிற்க, அடிமைகள் (தமிழர்கள்) தலைகுனிந்தபடி பயணம் போகும் காட்சியைக் காண அரசு காத்திருந்தது. அதே வேளை, கொலைக் கடலாக அன்று காட்சி தந்த கிளாலிக் கடலில் கடற்புலிகள் ஆதிக்கம் பெற்று, மக்களின் படகுப் பயணத்திற்குத் துணையாக நிமிரத் தொடங்கியபோது, கிளாலி இறங்குதுறையைப் பிடித்து (ஒப்பரேசன் யாழ் தேவி) கடற்பயணத்தையும் நிறுத்த இராணுவத் தலைமை முயன்றது.

ஆயினும், பூநகரித் தளத்தினுள் 'தவளை' புகுந்து அரைவாசிப் படைத்தளத்தை அழித்தொழித்ததுடன், படையினரின் சாவுச் செய்திகளைச் சிங்கள தேசத்திற்குக்கொடுத்து தமிழர் சேனையின் பலத்தை நிரூபித்த பின்னர்தான், சிங்கள மக்களிடம் மனமாற்றம் ஏற்படத் தொடங்கியது; அந்த மாற்றத்தின் அலையில் உயர்ந்தவர்தான் இன்றைய ஜனாதிபதி.

இந்த வரலாற்றை மனதிற்கொண்டு, எமது மக்கள் ஒரு கேள்வியைத் தம்முள் கேட்டுப் பார்க்கவேண்டும். அதாவது, அன்று படையினர் இருக்கக்கூடியதாகவே பூநகரிப் பாதையைத் திறக்கச் சம்மதிக்காத படைத் தலைமை, இன்று திறக்கச்சம்மதிப்பது ஏன்......? அது குடாநாட்டு மக்களின் நன்மைக்காக புதிய அரசு செய்யமுனையும் ஒரு நல்லெண்ண முயற்சி என்று பதிலளிப்பீர்களானால், சிங்கள ஆளும் வர்க்கத்தின் சூட்சும அரசியலை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தமாகும்.

அன்று குடாநாட்டிற்கு வேறு எந்தவித பாதையும் இல்லாத நிலையில், கிளாலிப் பாதை ஒரு மரணப் பொறியாகவே இருந்தது. ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. பணச்செலவு அதிகமாக இருந்தாலும்கூட, உயிர்ப் பயமில்லாத ஒரு சாதாரண போக்குவரத்துப் பாதையாக கிளாலிக் கடல் மாறிவிட்டது.

இந்த நிலையில் சிங்கள இராணுவத்தைப் பொறுத்தவரையில், இராணுவம் நிற்கத்தக்கதாக பூநகரிப் பாதையைத் திறப்பதும் ஒன்றுதான்; கிளாலிக் கடல் நீரேரியூடாக மக்கள் பயணம் செய்வதும் ஒன்றுதான். எனவேதான், பூநகரிப் பாதையால் மக்கள் பயணம்செய்ய தான் அனுமதிப்பதாக அரசு கூறுகின்றது; இதன்மூலம், 'மக்களுக்காகப் பாதை திறந்த புண்ணியவாளன்' என்ற நல்ல பெயரை உலகநாடுகளிடமிருந்து பெற்றுவிடலாம் என்றும் அரசு எண்ணுகின்றது. அதே நேரம், உளவியல் ரீதியாக வடதமிழீழ மக்கள் பெற்றுவரும் உறுதிநிலையை வளரவிடாமல் தடுக்கும் ஒரு கைங்கரியத்தையும் சிங்கள ஆளும் வர்க்கம் செய்ய விரும்புகின்றது. அதாவது, அரசுப்படைகளுடன் சவால் விட்டபடி நடைபெறும் கிளாலிப் பயணம், சாதாரண மக்களுக்கு ஒரு மனவலுவையும் தங்கு நிலையற்ற தன்மையையும் ஊட்டிவருகின்றது; அத்துடன் அரசுக்கெதிரான ஒரு எதிர்ப்புணர்வும் மக்களிடம் – அவர்களை அறியாமலே – ஏற்பட்டு வருகின்றது இவையெல்லாம் சேர்ந்து தமிழீழ தேசாபிமான உணர்வையும் மக்களிடம் புகுத்தி வருகின்றது. இவ்விதம் சிங்கள அரசுக்கெதிராக தமிழர்களிடம் பெருகிவரும் உளவலுவை வளரவிடாது தடுக்க, சிங்கள அரசும் இராணுவத் தலைமையும் விரும்புகின்றது. இத்தகைய உள்நோக்கங்களுக்காகவும் பாதையைத் திறக்க அது விரும்புகின்றது.




இவ்விதம் இராணுவம் இருக்கத்தக்கதாக பூநகரிப் பாதையைத் திறந்துவிடுவதில், இரண்டு முக்கிய விடயங்களை அரசும் இராணுவத் தலைமையும் சாதிக்கப் பார்க்கின்றன. வடதமிழீழ மக்கள் பெற்றுவரும் உளஉறுதியை – அரசு மீதான எதிர்ப்புணர்வை – வளரவிடாமல் தடுப்பது ஒரு நோக்கம். இரண்டாவது, தேவை ஏற்படும்போது, இதுவரை நிறைவேறாதிருக்கும் குடாநாடு மீதான ஆக்கிரமிப்புப் போரை விட்ட இடத்திலிருந்து தொடங்குவது.

பூநகரியில் இராணுவம் நிலைகொண்டிருக்கத்தக்கதாக ஒரு பாதை திறப்பிற்குப் புலிகள் இயக்கத்துடன் ஒரு உடன்பாட்டைக் கண்டுவிட்டால், அரசிற்கு இன்னுமொரு நன்மை காத்திருக்கின்றது. அதாவது, புலிகள் இயக்கத்தின் அனுமதியுடன், இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில், தாக்குதல் பயமின்றி ஒரு படை முகாமைத் தொடர்ந்து பேணலாம். அப்படி ஒரு உடன்பாடு வந்தால், இரண்டாயிரம் போர்வீரர்களால் பாதுகாக்கப்படும் இந்தப் படைத்தளத்தை ஒரு நிரந்தர இராணுவமுகாமாக என்றைக்கும் நிலைநிறுத்திவிட முடியும். இராணுவ ரீதியாக இந்த முட்டாள்தனத்தை புலிகள் இயக்கம் ஒருபோதும் செய்யமாட்டாது.

பூநகரி முகாமை அப்புறப்படுத்த அரசும் இராணுவத் தலைமையும் மறுத்துவருவதற்குரிய உண்மையான காரணிகளை மேலே சொல்லிவிட்டோம். ஆனால் அந்த உண்மைகளை மறைத்துவிட்டு இராணுவத் தலைமை கூறும் காரணங்கள் வேடிக்கையாக இருக்கின்றன. இதுபற்றி இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா விளக்குகையில், ''பூநகரி முகாமை முற்றாக எடுத்தால் அதைப் புலிகள் பாதையாக்கி, வன்னிப் பெருநிலப்பரப்பினுள் புகுந்து மன்னார், வவுனியா, வெளிஓயா முகாம்களைத் தாக்குவார்கள்; அத்துடன் திருக்கோணமலை – மட்டக்களப்பிலும் பெரிய தாக்குதல்களை மேற்கொள்வார்கள்'' எனக் கூறியுள்ளார்.

குடாநாட்டிற்கும் வன்னிப் பெருநிலத்திற்குமான பிரயாணத்தைப் பொறுத்தளவில், புலிகள் இயக்கத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இது எமது மக்களுக்குத் தெரியும்; சிங்கள இராணுவத்திற்கும் தெரியும். புலிகளின் விசைப்படகுகள் அரைமணியில் கிளாலிக் கடலைக் கடந்துவிடுகின்றன என்பதை, உலகப் பத்திரிகையாளர்களே கண்டு அனுபவித்துச் சொல்லியிருக்கின்றார்கள். சங்குப்பிட்டிப் பாதையூடாக வன்னிப் பெருநிலப்பகுதியின் ஓர் இடத்திற்குச் செல்வதற்கும், கிளாலிக் கடலைக் கடந்து அதே பகுதிக்குச் செல்வதற்கும், புலிகளின் இயக்கத்தைப் பொறுத்தளவில் ஒரேயளவு நேரமே எடுக்கும். அத்துடன், பூநகரிப் பாதையூடாகக் கொண்டுசெல்ல வேண்டிய படையணிகளையும் படைக்கலங்களையும், கிளாலிக் கடலூடாகவும் கொண்டுசெல்ல முடியும். பூநகரிச் சமரை இதற்கு உதாரணமாகக்கொள்ளலாம். நாகதேவன்துறையில் கடற்படை நிலைகொண்டிருக்கத்தக்கதாகவே,பல்லாயிரம் புலிவீரர்களையும் கனரக ஆயுதங்களையும் கிளாலிக் கடலூடாகவே புலிகள் கொண்டுசென்று – வந்தனர். அத்துடன், ''பூநகரிப் பாதை திறந்தவுடன் புலிகள் திருக்கோணமலையிலும் – மட்டக்களப்பிலும் பெரிய தாக்குதல்களை நடாத்திவிடுவார்கள்; அதனால்தான் பூநகரி முகாமை மூட மறுக்கின்றோம்'' என்று இராணுவத் தளபதி புலம்புவது, உண்மையில் பொருந்தாத ஒரு சாட்டு. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும்! பூநகரி இராணுவ முகாமை மூடினால், திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் பாரிய தாக்குதல்களைப் புலிகள் செய்வார்கள் என்பது, வேடிக்கையாக இல்லையா?

இது ஒருபுறமிருக்கட்டும். ''போரை இராணுவம் வியாபாரமாக்கப் பார்க்கின்றது'' என்ற, கடுமையான தொனியில் தனது இராணுவத்தையே குற்றம் சாட்டிய சந்திரிகா அம்மையார், எங்ஙனம் அதேபடையின் தளபதிகளை அழைத்து, பூநகரி முகாமை எடுக்கலாமா? விடலாமா ? என ஆலோசனை நடாத்தியிருக்கமுடியும்! ஒன்றுக்கொன்று முரணான இந்த இரு செயல்களும் – சில அரசியல் அவதானிகள் கூறுவது போல – சந்திரிகா அம்மையாரின் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகின்றதா? அல்லது தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைப் பேரினவாதிகள் நோக்குவதுபோல, இராணுவக் கண்கொண்டு சந்திரிகா அம்மையாரும் நோக்கத் தொடங்கியுள்ளார் என்பதைக் காட்டுகின்றதா?


இப்பொழுது நாங்கள் ஒரு முடிவுக்கு வரமுடியும். பூநகரியில் இராணுவம் இருக்கத்தக்கதாகப் பாதையைத் திறப்பது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா? அல்லது ஆபத்தாக முடியுமா? நிச்சயம் ஆபத்தில்தான் முடியும். ○

# செச்சின்யா: ஒரு சிறிய தேசத்தின் விடுதலைப்போர்:

ரஷ்ய நாட்டின் தென்பகுதியிலுள்ள காக்கேசியப் பிராந்தியத்தின் ஒரு சிறிய குடியரசுதான் செச்சின்யா. இது 10 இலட்சம் மக்கள் தொகையைக்கொண்ட ஒரு தேசிய இனத்தைக் கொண்டது. ரஷ்ய சம்மேளனத்தின் மொத்த சனத்தொகையில் செச்சின்ய மக்கள் ஒரு வீதத்திளர். தம்மைத்தாமே ஆளும் அரசியல் உரிமையைப் பெறுவதற்காக இம்மக்கள், ரஷ்ய வல்லரசுடன் ஒரு வீரமிகு விடுதலைப் போரை உறுதியுடன் நடாத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

**து**ருவக் கரடியின் பிடியிலிருந்து நழுவிப்போக காக்கேசியப் பிராந்தியத்தின் ஒரு சுண்டெலி துணிந்துவிட்டது.

பத்து இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட சிறிய தேசமாகிய செச்சின்யா தனது இறைமையைக் காக்க - பெரிய வல்லரசான ரஷ்யாவின் மேலாண்மைக்குள்ளிருந்து விடுபட - முடிவெடுத்த அரசியல் நிகழ்ச்சியையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம்.




முன்னர் சோவியத்யூனியனின் ஓர் அங்கமாக இருந்த செச்சின்யக் குடியரசு, 1991 ஆம் ஆண்டு தன்னை ஒரு சுதந்திர தேசமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. செச்சின்யாவின் தலைநகரான குறோஸ்னியில் இருந்த அரச மாளிகையில், செச்சின்யாவின் இடைக்கால அரசு இயங்கிவந்தது.

சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிட்டு, செச்சின்ய வீரர்கள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்று ரஷ்யா விடுத்த நிபந்தனையை அது, ஏற்க மறுத்தது. விளைவு - கடந்த டிசெம்பர் 11ஆம் திகதி, செச்சின்யா மீது ரஷ்யப் படைகள் ஏவிவிடப்பட்டன.

ஆரம்பத்தில் ரஷ்யப் படைகளின் பிரதான இராணுவ இலக்காக, தலைநகர் குறோஸ்னியில் இருந்த அரசமாளிகை விளங்கியது. சுமார் 40 நாள் கடும் சண்டையின் பின்னர் அரசமாளிகையைக் கைப்பற்றிய அரசபடைகள், மாளிகையில் பறந்துகொண்டிருந்த செச்சின்யக் கொடியை இறக்கி, அங்கே ரஷ்யக் கொடியை ஏற்றிவைத்தனர்.

மரபுவழிப் போர்முறைமூலம் முழுச் செச்சின்யப் பகுதியும் கைப்பற்றப்பட்டாலும், தொடர்ந்தும் ரஷ்யத் துருப்புக்களுக்கு எதிராக கெரில்லாப் போரைத் தொடர செச்சின்யத் தலைவர் உறுதி பூண்டுள்ளார்:

''ரஷ்ய - செச்சின்யப் போர், ஆப்கான் - ரஷ்யப் போரைவிட அதிக காலம் நடைபெறப்போகின்றது'' என, செச்சின்யத் தலைவர் டுடேயோவ் கூறியுள்ளார்.

1979ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், அண்டை நாடான ஆப்கானிஸ்தானுள் புகுந்த ரஷ்யப் படைகள், மிகச்சுலபமாக அதைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. ஆயினும், ஆப்கான் போராளிகளான 'முஜாகுதீன்'கள் ரஷ்யத் துருப்புக்களுக்கெதிராக நடாத்திய கெரில்லாப் போர், 10 வருடம்வரை நீண்டிருந்தது: இறுதியில், முஜாகுதீன்களை நசுக்க முடியாது, 1989இல் ரஷ்யப் படைகள் ஆப்கானிஸ்தானைவிட்டுத் தோல்வியுடன் வெளியேறின. இவ்விதமே ரஷ்யாவின் தலைவிதி செச்சின்யாவிலும் முடிவடையும் என்பதே, அதிபர் டுடேயோவின் கருத்தாகும்.

1979 டிசெம்பர் திங்கள், ஆப்கானிஸ்தானின் காபூல் அரச மாளிகையைப் பிடிக்க, ரஷ்யப் படைகளுக்கு 45 நிமிடங்களே தேவைப்பட்டிருந்தன. ஆனால் குறோஸ்னியில் இருந்த அரசமாளிகையை (செச்சின்யா) கைப்பற்ற ரஷ்யத் துருப்புகளுக்கு, சுமார் 40 நாட்கள் தேவையாக இருந்தன. இந்த இரு வேறு சம்பவங்களையும் ஒப்பிடும்போது, ரஷ்ய - செச்சின்யப் போர் நீளப்போகின்றது என்ற செச்சின்ய அதிபர் டுடேயோவின் கூற்றில், அர்த்தம் உள்ளதாகவே தோன்றுகின்றது.

அத்துடன், குறோஸ்னியைக் கைப்பற்றும், 40 நாள் போரில், ரஷ்யப் படைகள் 1160 போர் வீரர்களை இழந்துவிட்டன (இது 12 000 என செச்சின்ய அதிபர் கூறியுள்ளார்). அதேவேளை, 10 வருடம் தொடர்ந்து நடந்த ஆப்கான் - சோவியத் போரில் மொத்தம் 13,000 சோவியத் வீரர்கள் பலியாகி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செச்சின்ய அதிபர் டுடேயோவ், சோவியத் விமானப்படையின் ஒரு முன்னாள் தளபதி. இதேவேளை, ஆப்கான் - சோவியத் போரின் போது முஜாகுதீன்களின் இரகசிய இராணுவ நிலைகள் மீது நடந்த பல வான்வழித் தாக்குதல்களுக்கு இவர் தலைமைவகித்திருந்தார் என்பதும், இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

செச்சின்யாவுக்கு எதிரான போரிலும் ரஷ்ய விமானப் படையின் பங்கு அதிகமாகவே உள்ளது. ரஷ்யாவின் நவீன ஜெட் போர் விமானங்கள், செச்சின்ய வீரர்கள் 'இன்ரமீடியம் ரவைகளால்' கட்டிய 'வான் குடை' யை சுலபமாகப் பிய்த்துக்கொண்டு, செச்சின்யாவுக்குள் அழிவை விதைக்கின்றன, பாரிய அழிவைக் கொடுக்கும் 'கிளஸ்ரர்' ரக குண்டுகளை ரஷ்ய விமானங்கள் தாராளமாக வீசுகின்றன. இதுவரையில் 30,000 செச்சின்ய மக்கள், ரஷ்யாவின் வெடிமருந்துகளுக்குப் பலியாகிவிட்டனர் என்று டுடேயோவ் கூறியுள்ளார்.

சிறுவன் 'டேவிட்'டுக்கும் - இராட்சதன் 'கோலியாத்'திற்கும் இடையில் நடைபெறும் சண்டையே செச்சின்ய - ரஷ்யப்போர் என மேலைநாட்டுத் தொடர்பு சாதனங்கள் வர்ணிக்கின்றன. செச்சின்ய மக்கள் மீது மனிதாபிமானக் கழிவிரக்கம் காட்டும் மேற்கு நாடுகள், செச்சின்யத் தேசியத்தின் அரசியல் உரிமை பற்றி, வழமை போலவே வாய்திறக்கவில்லை! செச்சின்யா மீதான படையெடுப்பைக் கண்டிக்கும் அதேவேளை, ரஷ்ய அதிபர் யெல்ற்சினின் ஜனநாயகத் தலைமைத்துவத்தைத் தாம் அங்கீகரிப்பதாகவே கருத்து வெளியிட்டு, தமது இரட்டைத் தன்மையை மேற்குலகம் பறைசாற்றுகின்றது.

கொம்யூனிச பூதத்தைக் கொல்வதற்காக, சோவியத்யூனியன் என்ற சோசலிச இராச்சியத்தைக் கூறுபோட்டுப் பார்க்க, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் விரும்பியது: அது வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது. ஆனால் இப்போது (ஒரு அளவுக்கு மேல்), ரஷ்யா பிளவுபடுவதை அதே மேற்குலகம் விரும்பவில்லை. ஜனநாயகத்தைத் திருமணம் செய்துவிட்ட ரஷ்யாவில் அவை செய்த பில்லியன் டொலர்கள் பெறுமதியான முதலீடுகளும், ரஷ்யாவின் பாரிய சந்தையுமே அதற்குப் பிரதான காரணம்; அதே வேளை, பிரிந்துபோக முயலும் செச்சின்யா ஒரு இஸ்லாமியக் குடியரசு என்பதாகவும் இருக்கலாம். பிரிந்து செல்லும் இஸ்லாமியக் குடியரசுகள் ஒன்றிணைந்து இஸ்லாமிய உலகைப் பலப்படுத்திவிடலாம் என்ற அச்சம், மேற்கு நாடுகளிடம் நிறைய உண்டு. ''கொம்யூனிச பேயைக்'' கொன்று வெற்றிகண்ட மேற்குலகம் இப்போது, ''இஸ்லாமியப் பூதமொன்று'' உலகை மிரட்டப் புறப்பட்டுள்ளதாகப் பிரச்சாரம் செய்கின்றது.

நான்கு புறமும் நிலத்தால் சூழப்பட்ட செச்சின்யாவில் இப்போது, 40,000 ரஷ்யப் படைகள் தரித்து நிற்கின்றன. செச்சின்யாவை விட்டுக்கொடுத்தால், ரஷ்ய சம்மேளனத்திலுள்ள இன்னும் பல சிறிய தேசிய இனங்களும் பிரிந்துபோய் விடும் என்பது, ரஷ்யாவின் வாதம். ஏற்கெனவே 14 குடியரசுகளை ரஷ்யப் பேரரசு இழந்துவிட்டது. ஆயினும் செச்சின்யா மீது ரஷ்யா காட்டும் கொடூரம் சிறிய தேசிய இனங்களைப் பிரிந்துபோகத் தூண்டுமா அல்லது தடுக்குமா என்பதை, செச்சின்யாவில் இனிமேல் நடைபெறப்போகும் கெரில்லாப் போர் தீர்மானிக்கப்போகின்றது. அதே வேளை, செச்சின்யாவில் நடைபெறப்போகும் கெரில்லாப் போர், அது அமைந்திருக்கும் காக்கேசியப் பிராந்தியத்தின் மற்றைய குடியரசுகளுக்கும் பரவக்கூடும் என்பது பலரது எதிர்பார்ப்பு.


நிலைமை இப்படியிருக்க, ரஷ்யாவிலிருந்து பிரிந்துசென்ற குடியரசுகளும் முன்னாள் கொம்யூனிச நாடுகளும், ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக, அமெரிக்கா தலைமையிலான இராணுவக் கூட்டணியான நேட்டோவில் சேர முயலக்கூடும் என்றும், ஐரோப்பிய அரசியல் அவதானிகள் எதிர்வுகூறுகின்றனர். உக்ரேன், செக் குடியரசு, சிலோவாக்கியக் குடியரசு, போலந்து, கங்கேரி என்பன அந்தப் பட்டியலில் முந்திக்கொள்ளும் நாடுகளாக மாறக்கூடும் என்பது அவர்களது கணிப்பு

ஜார் வம்ச ஆட்சிக்காலங்களின் போது, ரஷ்ய நாட்டைச் சுற்றியிருந்த பல சிறிய தேசிய இனங்கள் ரஷ்யப் பேரரசுடன் பலவந்தமாக இணைக்கப்பட்டிருந்தன. இத்தகைய ஒரு பலவந்த இணைப்புக்கு எதிராக, இதே செச்சின்ய மக்கள், ஜார் மன்னரின் படைக்கு எதிராக 47 வருடங்கள் நடாத்திய கெரில்லாச் சண்டை (1817 - 1864) காக்கேசியப் பிராந்தியத்தையே அப்போது உலுக்கியிருந்தது!

''தாக்கு - பின்வாங்கு.
பயத்திலும் பீதியிலும் ஆக்கிரமிப்பாளர்கள் ஓட்டமெடுக்கும்வரை -
தாக்கு - பின்வாங்கு.''

இதுதான், செச்சின்ய மக்களின் மூதாதையர்கள் 178 வருடங்களுக்கு முன், ஜாரின் படைகளுக்கு எதிராகப் பயன்படுத்திய போர் முறைத் திட்டம். அன்றைய 47 வருடப் போரின் முடிவில், செச்சின்யா முற்றாகத் தோற்கடிக்கப்பட்டது இம்முறையும் அப்படி நடைபெறுமா? அல்லது ஒரு நூற்றாண்டின் முன் செச்சின்யா தான் பெற்றதை ரஷ்யாவுக்குத் திருப்பிக் கொடுக்குமா?

பொறுத்திருந்து பார்ப்போம்! ○



# பண்டா - செல்வா உடன்படிக்கை

## கனத்தில் குறைந்தது : காலத்தால் பிந்தியது

சமஷ்டி முறையிலான அரசமைப்பின் கீழ், இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும் என்ற கருத்து கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் மத்தியிலிருந்து 1920 களின் நடுப்பகுதியில் எழுந்தது. பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராயிருந்த கரையோரச் சிங்களவரான திரு எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா, சமஷ்டி முறையிலான தீர்வே இனப்பிரச்சினையைத் தீர்க்க அவசியமானது என்ற கருத்தை, 1926 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, 'மாணவ கொங்கிரஸ்' கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். ஏறக்குறைய இக்காலகட்டத்தில் கண்டியர் மாகாணசபையும் இவ்வாறான கருத்தினை முன்வைத்தது.

மேற்படி இரு பகுதியினரும் இலங்கையை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும் என்றும் கூறினர். அதன்படி கரையோரச் சிங்களவர் மாகாணம், கண்டிச் சிஙகளவர் மாகாணம், தமிழர் மாகாணம் என அவை பிரிக்கப்படவேண்டும் என்றனர். இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கு மாகாணங்களை தமிழர் மாகாணம் எனவும், ஏனைய கரையோர மாகாணங்களை கரையோரச் சிங்களவர் மாகாணம் எனவும், மலையகத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் கண்டியர் மாகாணம் எனவும் இம்மூன்று மாகாணங்களும் பிரிக்கப்படவேண்டும் என்று கூறினர்.

இதன் பின் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையிலான சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி), 1949 ஆம் ஆண்டு, சமஷ்டிக் கோரிக்கையினை முன்வைத்தது. 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கா தலைமையிலான 'மக்கள் ஐக்கிய முன்னணி' (எம். ஈ. பி.) பெரும்பான்மை ஆசனங்களைத் தென்னிலங்கையில் பெற்றதன்மூலம், பண்டாரநாயக்கா பிரதமரானார். தமிழ்ப் பகுதியில் செல்வநாயகம் தலைமையிலான சமஷ்டிக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றதன்மூலம், செல்வநாயகம் தமிழரின் தலைமையைப் பெற்றுக் கொண்டார்.

பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை 1956 ஆம் ஆண்டு நிறைவேற்றினார். இதற்கு எதிராக சமஷ்டிக் கட்சி திருமலை யாத்திரை நடாத்தியது. மொழி உரிமையும் சமஷ்டி முறையிலான தீர்வும் கோரி, சமஷ்டிக் கட்சி திருமலையிற் கூட்டிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியது. இது 'திருமலைத் தீர்மானம்' எனப்படும்.

திருமலைத் தீர்மானத்தை பண்டாரநாயக்காவிற்கு அனுப்பிவைத்து, அதனை நிறைவேற்ற ஒரு வருடகால அவகாசம் அவருக்குத் தரப்படுவதாகவும் அவ்வாறு ஒரு வருடத்துக்குள் அதனை அரசாங்கம் ஏற்க மறுத்தால், அதற்கான கால அவகாசம் முடிவடைந்ததும் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவருக்கு அறிவிக்கப்பட்டது.


ஒருவருட கால அவகாச முடிவில் மட்டக்களப்பில் சமஷ்டிக் கட்சியின் மாநாடு கூடியது. சத்தியாக்கிரகப் போராட்டமே நேரடி நடவடிக்கை எனத் திட்டமிடப்பட்டது. இந்த நேரடிப் போராட்ட நடவடிக்கையைக் கண்டு பண்டாரநாயக்கா அச்சமடைந்தார். தென்னிலங்கையில் இடதுசாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்த தொழிற்சங்கங்களும், திரு. தொண்டமான் தலைமையிலான தொழிற்சங்கமும் திடீர் திடீர் என வேலைநிறுத்தங்களில் குதிக்கத் தொடங்கிய காலமிது. பிரித்தானிய தளங்களை நீக்கியதன்மூலமும், அந்நிய கொம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதன்மூலமும், மேற்குலகின் அச்சுறுத்தலுக்கும் நெருக்கடிகளுக்கும் பெரிதும் உட்பட்ட காலமிது. தேசிய மயமாக்கற் கொள்கைகளினால் உள்நாட்டு முதலாளிகளினது கடும் எதிர்ப்பிற்கு உள்ளாகிய காலமிது. கிறீஸ்தவ மத மிஷனறிக் கல்லூரிகள் சம்பந்தமான கொள்கையினால் மிஷனறிகளின் எதிர்ப்புக்கு உள்ளான காலமிது. மேலும் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு கூட்டரசாங்கம் என்ற வகையில், அந்தக் கூட்டுக்குள் கொந்தளிப்புகள் ஏற்பட்ட காலமிது. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பிலிப் குணவர்த்தனாவிற்கு எதிராக அரசாங்கத்துக்குள்ளும் புறமும் முரண்பாடுகள் பெரிதும் ஏற்படத் தொடங்கிய காலமிது பண்டாரநாயக்காவின் தேர்தல் வெற்றிக்குக் காரணமான 'எக்ஸத் பிக்கு பெரமுன' பண்டாரநாயக்காவிற்கு பெரிதும் நெருக்கடிகளைக் கொடுக்கத்தொடங்கிய காலமிது. மேலும் அமைச்சர்களிடையே கூட்டுப்பொறுப்பின்மையும், ஓர் அமைச்சரை இன்னொரு அமைச்சர் வெளிப்படையாகப் பொதுக்கூட்டங்களிற் சாடும் நிலையும் வளர்ச்சி அடைந்து, நாற்புறமும் குழப்பங்களாலும் கொந்தளிப்புக்களாலும் தான் சூழப்பட்ட இக்காலகட்டத்தில், தமிழ் மக்கள் பக்கத்திலிருந்தும் நேரடிப் போராட்டம் எழுந்தால் அதுவும் சேர்ந்து பாரதூரமான வீழ்ச்சியைக் கொண்டு வந்துவிடுமென பண்டாரநாயக்கா அச்சமடைந்த சூழலில், ஒரு வருடகால அவகாசம் முடிவடையும் இறுதிக்கட்டத்தில், செல்வநாயகத்துடன் ஓர் உடன்பாட்டிற்குத் தயாரானார்.

நேரடிப் போராட்டம் வெடிக்கப்போகின்றதென நாற்புறமும் எதிர்பார்க்கப்பட்டிருந்த கடைசி நிமிடத்தில், பண்டாரநாயக்கா செல்வநாயகத்தைப் பேச்சுவார்த்தைககு அழைத்தார்.

கைச்சாத்திடப்பட்ட 'பண்டா - செல்வா உடன்படிக்கை'யின் முன்னுரையான 'அ' பகுதியில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"உரையாடலின் தொடக்கத்திலேயே தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்றதென்பது தெளிவாகியது.

சமஷ்டி அரசியல் அமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் நிலையில் இயலாது எனப் பிரதமர் கூறினார்." (பகுதி 'அ', இரண்டாம், மூன்றாம் பந்திகள்).




1926 ஆம் ஆண்டு, சமஷ்டியேஒரேயொரு தீர்வு என்ற கருத்தினை முன்வைத்திருந்த பண்டாரநாயக்கா, தற்போது அதுபற்றிப் பேசமுடியாது என்று அக்கோரிக்கையை மேற்கண்டவாறு நிராகரித்தார். இதைத் தொடர்ந்து,

"இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் எல்லாவற்றையும் கைவிடாத வகையில், ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும்கேள்வி பின் எழுந்தது." (பகுதி 'அ', 4 ஆம் பந்தி).

அப்போது தமிழரசுக் கட்சியானது, பண்டாரநாயக்கா சமர்ப்பித்த ஒரு மாற்றுத் திட்டத்தினைப் பரிசிலனை செய்யத் தயாரானது; உடன்படிக்கையில் அப்பகுதி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து, அதன்கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சி கருத்திற்கொண்டிருக்கும் சில விடயங்களை நியாயமாக உள்ளடக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார்." (பகுதி 'அ', 5ஆம் பந்தி).

பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்பாட்டிற்கு வரத் தமிழரசுக் கட்சி தயாரானது. தமது கோரிக்கையின் ஒருபகுதி என்ற வகையில் இதனை ஓர் இடைக்கால ஏற்பாடாகத்தான் தமிழரசுக்கட்சி கருத்திற்கொண்டதென்பதையும், தமிழரசுக் கட்சியின் அக்கருத்தினை ஏற்று "இடைக்கால ஒழுங்கு" என்று கூறித்தான் பண்டாரநாயக்கா கைச்சாத்திட்டதனையும் இங்கு பெரிதும் கவனத்தில் எடுக்கவேண்டும். அதாவது, தமிழ் மக்களின் தேவைக்கு இது போதாது என்பதுதான் இங்கு "இடைக்கால ஏற்பாடு" என்பதன் அர்த்தமாகும்.

உடன்படிக்கையில் "இடைக்கால ஒழுங்கு" என்ற தலைப்பின் கீழ் வரும் முதலாவது பந்தியில்"...... பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர்" (தமிழரசுக் கட்சியினர்)என்று கூறப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் ஓர் இடைக்கால ஏற்பாடாக உடன்படிக்கையின் பல இடங்களிலும் கூறப்பட்டுள்ளதனையும், அதனை ஏற்றுப் பண்டாரநாயக்கா கைச்சாத்திட்டுள்ளதனையும் அவதானிக்கலாம். சமஷ்டிக் கோரிக்கையினை முன்வைத்த தமிழரசுக் கட்சியானது, பண்டா - செல்வா உடன்பாட்டை ஓர் இடைக்கால ஏற்பாடென்று திரும்பத் திரும்ப வற்புறுத்தியுள்ளதனையும், பண்டாரநாயக்கா அதனை ஏற்றுக்கொண்டுள்ளதையும் இங்கு சிறப்பாகவும் முககியமாகவும் அவதானிக்கவேண்டும்.

மேலும் இவ் உடன்படிக்கையானது ஒரு கொள்கை வரைவே தவிர, திட்ட வரைவு அல்ல. அதாவது, இரு தலைவர்களுக்கும் இடையில் ஒரு பொதுவான கொள்கை உடன்பாடு எட்டப்பட்டு அதன் அடிப்படையில் அதற்கான திட்ட வரையறை பின்பு வகுக்கப்படுமென உடன்பாடு காணப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழிருத்தல், வடக்கு - கிழக்கில் பிராந்திய சபைகளை அமைத்தல் எனும் இரண்டு விடயங்களுமே உடன்பாட்டின் தலையாய அம்சங்களாகும்.

இதன்பிரகாரம் வடமாகாணம் ஒரு பிராந்திய சபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளாகவும் அமையும்.

"மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம்பெறும்." (பகுதி 'அ', 3).

தமிழ் மக்கள் தமக்கெனத் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்டுள்ள ஒரு தனித்துவமான

# கொங்கிரஸ் கட்சிக்குள் தீவிர நெருக்கடி

# இந்திய தேசிய அரசியலில் கொந்தளிப்பு!

இந்தியாவின் ஆளும் கட்சியான கொங்கிரஸ் கட்சிக்குள் பலத்த நெருக்கடி தோன்றியுள்ளது. அதன் தலைவர் பி. வி. நரசிம்ம ராவுக்கு எதிராக கொங்கிரசின் மூத்த தலைவர்களில் ஒருவரான அர்ஜுன்சிங் செய்த கலகமும், அதைத் தொடர்ந்து பிரதமர் ராவின் உத்தரவின்பேரில் அவர் கட்சியைவிட்டு வெளியேற்றப்பட்டதும், கொங்கிரஸ் கோட்டையில் ஒரு புயலை ஏற்படுத்திவிட்டன. பிரதமர் நரசிம்மராவுக்கும் அர்ஜுன்சிங்கிற்கும் இடையேயான முரண்பாடு, ஒட்டமுடியாத அளவுக்கு பிளவுபட்டுவிட்டது இப்பிளவு கொங்கிரஸ் கட்சியை பெருமளவுக்குப் பலவீனப்படுத்தும் என்பது, அரசியல் அவதானிகளது கணிப்பு. இந்த இருவருக்கும் இடையேயான முரண்பாட்டிற்கு பல்வேறு அரசியல் காரணிகள் சொல்லப்பட்டாலும், கொங்கிரசின் தலைமைப் பதவியைக் குறியாகக் கொண்டதாகவே அது இருக்கின்றது என்பது வெளிப்படை.

தமிழ்நாட்டின் சிறிபெரும்புதூரில் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, எவருமே எதிர்பார்க்காத நிலையில், இந்தியாவின் பிரதமராக நரசிம்மராவ் அவர்கள் பதவியேற்றுக்கொண்டார். அவர் பிரதமராகப் பதவியேற்ற சில மாதங்களுக்குள்ளேயே, அவருக்குப் போட்டியாக, மனித வளத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த சரத்பவாரும் காய்களை நகர்த்தத் தொடங்கியிருந்தனர். ஆயினும், இடையில் மகாராஷ்டிர மாநிலத்தின் முதல்வராக சரத்பவார் பதவியேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, தலைமைப் போட்டியிலிருந்து அவர் ஒதுங்கியிருந்தார். ஆனால் அர்ஜுன்சிங் அவ்வப்போது நரசிம்மராவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திக்கொண்டே இருந்தார்.


அண்மையில், இந்தியாவின் தென் மாநிலங்களில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் கொங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தவுடன், இந்த மோதல் உச்சக்கட்டத்திற்குச் சென்றது. கட்சியின் தலைமைப் பதவியை நரசிம்மராவ் விட்டு விலகவேண்டுமென, அர்ஜுன்சிங் குழுவினர் வற்புறுத்தி வந்தனர். 1996 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது, வெற்றியின் பாதையில் கொங்கிரசை வழிநடாத்தும் திறமை நரசிம்மராவுக்கு இல்லை என்பது, அர்ஜுன் சிங் குழுவினரின் உறுதியான வாதம்.

இந்த வாதம், இப்போது பெரிதாக எடுபடாவிட்டாலும், இம்மாத இறுதியில் ஆறு வட இந்திய மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்கள் நரசிம்மராவின் தலைவிதியைத் தீர்மானிப்பதாக அமையும் என்பது, அரசியல் நோக்கர்களது கருத்தாகும்.

நரசிம்மராவுக்கு எதிரான தலைமைப் போட்டியில், திருமதி சோனியாகாந்தியின் ஆதரவு அர்ஜுன் சிங்கிற்கே இருப்பதாக, இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. திரைமறைவு அரசியலில் இருந்தாலும் சோனியாகாந்தியின் வார்த்தைகளுக்குக் கொங்கிரஸ் தலைவர்கள் கட்டுப்பட்டவர்களாகவே இருக்கின்றனர் என, அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. சோனியாகாந்தியின் குடும்பம் தொடர்பாக நரசிம்மராவ் காட்டிவந்த அசமந்தப் போக்கால் அதிருப்தி அடைந்திருக்கும் அவர், அர்ஜுன்சிங்கிற்கு உதவுவார் என்பதே பலரது எதிர்பார்ப்பு.

64 வயதாகும் அர்ஜுன்சிங் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்தவர். இவர் ஒரு நேரு குடும்ப விசுவாசி என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியா சுதந்திரம் பெற்று 47 வருடங்கள் முடிவடைந்துவிட்டன. இந்த 47 வருடங்களிலும் சுதந்திர இந்தியாவின் 36 வருடங்களை, நேரு - இந்திரா - ராஜீவ் என்ற நேரு குடும்பமே ஆண்டுவந்தது என்பது கவனிக்கத்தக்கது. 1991 ஆம் ஆண்டு, தேர்தல் பரப்புரை ஒன்றின்போது, தமிழ்நாட்டில் வைத்து ராஜீவ் குண்டுத்தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதை அடுத்து, நேருவம்ச ஆட்சி முடிவுக்கு வந்தது; நேருவம்ச ஆட்சியின் முடிவைத் தொடர்ந்து, இந்திய ஆளும் வர்க்கமான பிராமணியத்தின் வலுவும் பலவீனப்படத் தொடங்கியுள்ளது.

பிரதமர் ராவின் பதவிக்கு ஆபத்து வந்ததைத் தொடர்ந்து, அண்மையில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையும் கேள்விக்குரிய ஒன்றாக மாறிவிட்டது. ஆட்சியாளர்கள் மாறினாலும் பொருளாதாரக் கொள்கை இனி மாறப்போவதில்லை என, இந்திய பொருளியல் நிபுணர்கள் கருத்துக் கூறியுள்ளனர். ஆயினும் அர்ஜுன்சிங், திறந்த பொருளாதாரக் கொள்கையில் உள்ள பல விடயங்கள் இந்திய நலனுக்கு எதிராக இருக்கின்றன என, பகிரங்கமாகக் குரல் கொடுத்துள்ளார்.



நரசிம்மராவின் தலைமைப் பதவியை அர்ஜுன்சிங் தட்டிப்பறித்துக்கொண்டாலும் கூட, கொங்கிரஸ் கட்சியை ஒன்றிணைத்து, ஒரு பலமான தலைமையைக் கட்சிக்கு அவர் கொடுப்பாரா என்பது கேள்வியாகவே இருக்கின்றது. ஏனெனில், நேரு வம்சத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, மாநிலவாரியான தேசியவாதங்கள் வேகம்பெறத் தொடங்கிவிட்டன. இதனால், முன்னரைப்போல இந்திய பிராமணியத்தின் சின்னமாகிய கொங்கிரஸ் கட்சி, தேசிய அளவில் நிலையான ஆட்சியைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு பலமான கட்சியாக விளங்குவது கடினம் என, அவதானிகள் கருதுகின்றனர்.

இந்திய மத்திய அரசின் ஸ்திரத்தன்மைக்குப் பங்கம் நேர்ந்துவிட்ட இந்த வேளையில், ஆளும் வர்க்கமான இந்தியப் பிராமணியத்திற்குத் தொல்லை கொடுத்து வந்த வடஇந்தியத் தேசிய இனங்களான காஷ்மீரியரும், பஞ்சாபியரும் தங்களுக்குள் கைகோத்துக்கொள்ள எடுத்திருக்கும் முடிவு, பிராமணியத்தைக் கவலைகொள்ளவே செய்யும். காஷ்மீரின் இளந்தலைவர் சாபர் அவர்கள், ஜனவரி மாதப் பிற்பகுதியில் பஞ்சாப்புக்கு விஜயம் செய்து, பொற்கோவிலில் வைத்து பஞ்சாப் மதத் தலைவர்களைச் சந்தித்து, மத்திய அரசுக்கெதிராக கருத்துக் கூறியுள்ளார். இந்திய மத்திய அரசை விளித்து, ''ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக இரு தேசிய இனங்களும் இணைந்து போராடவேண்டும்'' என்று அறைகூவல் விடுத்துமுள்ளார். பஞ்சாபிய மதத் தலைவர்கள், முஸ்லிம் தலைவரான சாபருக்கு பொற்கோவிலில்வைத்து உயர்ந்த கௌரவிப்பையும் வழங்கியுள்ளனர். இரண்டு தேசிய இனங்களும் நடாத்திவரும் தனிநாட்டுக்கான விடுதலைப் போரில், மதமும் மதத் தலைவர்களும் வகிக்கும் பங்கு மிக அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப்பும் காஷ்மீரும் இந்திய உபகண்ட அரசியலில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடக்கிவைத்துள்ளன. அதாவது, மத்திய அரசுக்கு எதிராக சுதந்திரம் வேண்டிப் போராடும் தேசிய இனங்களின் இணைந்த போராட்டத்திற்கு இது கட்டியம் கூறுவதுபோலுள்ளது. இதேவேளை, தமிழீழ தேசியத்தின் வளர்ச்சிகண்டும் இந்திய அரசு அஞ்சும் போக்கும் பெருகிவருகின்றது. 'தமிழாராய்ச்சி மாநாட்டில்' பங்குபற்றத் தமிழ்நாடு சென்ற தமிழீழ அறிஞர்களை நாடுகடத்திய செயல், அதையே காட்டுகின்றது. தமிழ்த் தேசிய நெருப்பு தமிழீழத்திலிருந்து தமிழ்நாட்டிலும் பரவிவிடும் என்று, இந்தியப் பிராமணியம் அஞ்சுகின்றது.

நேருவம்ச ஆட்சியின் முடிவுடன் பலவீனப்பட்டுப்போயுள்ள கொங்கிரஸ் கட்சியாலோ அல்லது இந்து அடிப்படைவாதக் கட்சியான பா. ஜ. கட்சியாலோ இனிமேல் இந்தியாவுக்கு உறுதியான ஆட்சியினை வழங்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. அதேவேளை, பிராமணிய ஆதிக்கத்தையும் அதன் அடக்குமுறையையும் எதிர்த்தபடி மாநிலவாரியான தேசியவாதங்கள் தலையெடுக்கும் சாத்தியமும் முன்னைவிட அதிகரித்துள்ளது. எதிர்கால இந்தியா சந்திக்கப்போகும் பிரச்சினைகளும் அமைதியின்மையும் தென்னாசிய அரசியலில் பிரளயங்களை ஏற்படுத்தலாம். அதற்குரிய அறிகுறிகள் இந்தியாவிலும் சரி, இந்தியாவுக்கு வெளியிலும் சரி தெரியத் தொடங்கிவிட்டன! ○

---

## பண்டா - செல்வா......

தேசிய இனம். ஒரு தேசிய இனத்திற்கு அதன் பிரதேச ஒருமைப்பாடு அடிப்படையானது. பண்டா - செல்வா உடன்பாடு இந்த பிரதேச ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆனால் விரும்பினால் இணையலாம் என்றொரு ஏற்பாடுண்டு இங்கு இணையலாம் என்பது ஒரு நிபந்தனை. இங்கு பிரதேச ஒருமைப்பாட்டிற்கு நிபந்தனை வைப்பது தவறானது. இலங்கை இந்திய உடன்பாடும் பிரதேச ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாது; அதற்கு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இணையலாம் என்றொரு நிபந்தனையை விதித்துள்ளது. இந்த நிபந்தனைகள் சிங்கள ஆட்சியாளருக்குச் சாதகமான பல உள்நோக்கங்களையும் சூழ்ச்சிகளையும் கொண்டவை. ஒன்றாய் இருக்கும் தமிழ்ப் பிரதேச முழுமையைப் பிரித்துவிட்டு இணைவுபற்றிக் கதைக்கிறார்கள் இங்கு 'இணைவு' என்பது அல்ல பிரச்சினை; 'பிரித்தல்' என்பதுதான் பிரச்சினை. எனவே, தமிழ்ப் பிரதேசம் பிரிக்கப்படாத ஒரு முழுமையான அலகாகவே சிந்திக்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க, பதவிக்கு வரமுன்பும் பதவிக்கு வந்த பின்பும் ஒரு கருத்தை நாசுக்காகக் கூறிவருகிறார். ''புதிய எல்லை நிர்ணயம்'' என்பதன்மூலம் அவர் ஒரு நாசுக்கான திட்டத்தினைக் கூறுகிறார். இதன்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் வாழும் பகுதி வெட்டப்பட்டு அயலிலுள்ள சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்கப்படும்; இவ்வாறு முஸ்லிம் பகுதியும் வெட்டி எடுக்கப்படும். கிழக்கு மாகாணத்தின் எஞ்சிய பகுதி வடமாகாணத்துடன் சேர்க்கப்படும். இதுவே சந்திரிகாவின் உத்தேசத் தீர்வு போலத் தெரிகின்றது. நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன் சந்திரிகா திரு. காமினி திஸநாயக்கவுடன் கூட்டாக இருந்த காலத்தில், மேற்படி திட்டம் வரையப்பட்டதாக, 'கவுண்ட பொயின்ற்' எனும் சஞ்சிகை கருத்து வெளியிட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தை இரண்டிற்கும் மேற்பட்ட அலகுகளாகப் பிரிக்க பண்டா - செல்வா உடன்பாடு வழிவகுக்கின்றது ஆனபடியால்தான் பண்டா- செல்வா உடன்படிக்கையின் அடிப்படையில் விரிவாக்கப்பட்ட தீர்வு எனும் கருத்தை சந்திரிகா கூறுகிறார். பண்டா- செல்வா உடன்பாட்டிற்கூட கிழக்கு மாகாணத்தின் எந்தொரு பகுதியையும் சிங்களப் பகுதிகளுடன் இணைக்க ஏற்பாடில்லை. ஆனால் இப்புதிய எல்லை நிர்ணயம் என்பதன்மூலம், பண்டா- செல்வா உடன்பாட்டில் அலகுகளாகப் பிரிக்கப்பட்ட சில அலகுகளைச் சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்க சந்திரிகா முயல்கிறார்; இதுவரை காலம் முன்வைக்கப்பட்ட எந்தவொரு திட்டத்தைவிடவும் இது பாதகமானது.

விடுதலைப் புலிகளாலும் தமிழ் மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாத இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை விடவும் இந்த விடயத்தில் இது, பாதகமான அம்சத்தைக் கொண்டுள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கிழக்கு மாகாணத்தை ஓர் அலகாக வைத்திருந்தது. அத்துடன் கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியும் சிங்களப் பகுதிகளுடன் இணைவதற்கு அதில் இடம் இருக்கவில்லை.

தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம். இன்று சிங்களவர் வாழும் கிழக்கு மாகாணப் பகுதி என்பது 1948 ஆம் ஆண்டின் பின்பு நிகழ்ந்த சிங்களக் குடியேற்றங்களினால் உருவானதாகும். மேலும் அன்று ஒப்புக்கொள்ளப்பட்ட பண்டா -

(15 ஆம் பக்கம் பார்க்க)

# நிலையான நினைவாகிச் சென்றோன்

# நினைவோடு தமிழீழம் வெல்வோம்.

'தமிழீழம்' -

இது தனித்த ஒன்றுதான்; பிரிந்த இரண்டின் சேர்க்கையல்ல.

ஒரே இனம், ஒரே மொழி, ஒரே நிலம், ஒரே வானம், ஒரே கடல் - ஒரு தமிழீழம்; தமிழீழம் தனியொன்றே அல்லாமல், இருவேறு துண்டுகளின் கூட்டல்ல.

வல்லிபுரக்கோயில் மணற்காட்டில் - அலைகளாய் விழுந்து உவகையோடு எழுகின்ற இந்துமா ஆழி, 'எங்கள் கடல்!' என்றால் - 'குமண'க் கரையின் மணலினில் உருண்டு, கண்களை எரித்துச் சுகம் விசாரிப்பதும் 'எங்களோடது!' தான்; 'கருவேலன் காட்டு' ஓரத்தில் மோதி பாறையோடு சுறாவும் திருக்கையும் தருவதும், 'நம்மடது'தான் - தமிழீழம் ஒன்றுதான்!

'வாளேந்திய சிங்கம்' தானேந்திடும் வாளால் துண்டாக்கிப் போட்ட பின்பு, கூட்டாகிச் 'சங்கம்' அமைக்க - இது சோவியத் சாம்ராஜ்ஜியமும் அல்ல; துகள்களாகிப் பிளவுபடுத்தி சிரழித்துச் சிதைத்துவிட - இது 'பொஸ்னியா'வும் அல்ல.

'கரந்தனாற்றில்' கால் நனைத்துக்கொண்டு தமிழீழம் என்றால், வரண்டுபோய்க் கிடக்கின்ற 'வழுக்கியாறும்' தமிழீழம்தான். மன்னாரை ஈரமாக்கும் 'பறங்கியாறு'ம் அதுதான் - 'மணலாறு'ம் எங்களதேதான்!

இலங்கையில் -
ஆசியாக் கண்டத்தின் தெற்கே, இந்துமா சமுத்திரத்தின் தாலாட்டில் மிதக்கும் அந்த மாங்காய் வடிவச் சிறு தீவில் -

அதன் - வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு பிரதேசங்களில் - தமிழர்கள் காலாதிகாலமாக வேரோடி வாழ்ந்த 20,000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு; தமிழர் மூதாதையரின் வியர்வை கலந்த 23,000 சதுர கிலோ மீற்றர் கடற்பரப்பு; இவற்றின் மேலாக கூரையாய் விரியும் தமிழர் சரித்திரத்தின் மூச்சுக் கலந்திருக்கும் வான் பரப்பு இந்த மூன்றுக்கும் ஒரே பெயர், அதுதான் தமிழீழம்.

வடக்கையும் கிழக்கையும் "இணையக்கூடாது! இணைக்கக்கூடாது!" என்று கொழும்பிலிருந்து கத்திக்கொண்டிருக்கின்றார்கள். அது எமக்குப் புரியவும் இல்லை; புரிந்துகொள்ள நாம விரும்பவும் இல்லை; விரும்பவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், 'இணைப்பது' அல்லவே எமது பிரச்சினை. தமிழீழத்தை (வடக்கையும் கிழக்கையும்) 'பிரிக்கக்கூடாது' என்பதுவே எமது பிரச்சினை. தேசம் பிரியக்கூடாது, யாரும் பிளக்கவேகூடாது என்பதற்காகவே நாங்கள் செத்துக்கொண்டிருக்கிறோம்; விடவே மாட்டோம்!

ஓரங்களில் அரிக்கப்படாத - நடுவினில் பிரிக்கப்படாத - நிறைவு குறைக்கப்படாத, உருக்குலைவற்ற தமிழீழத்தை மீட்டெடுத்து, தமிழனின் சுதந்திர தனியரசைப் பிரகடனப்படுத்தும் வரை, விடவேமாட்டோம்!

கொக்குவில் புயலாகும்; கொக்குத்தொடுவாய் களமாடும்; கொம்மாந்துறை அனலாகும்; தனியரசு எமதாகும் வரை தமிழீழம் போராடும். பலாலி வீதியிலிருந்து புனானை வீதிவரை விடுதலைப்போர் நீளும். புலி ஆடும் கொடி எங்கள் நிலம் ஆளும் நாள்வரை போர் நீளும்! போர் நீளும்!! விடவேமாட்டோம்.

தேசத்தை மீட்கும் இன்றைய போரில் தென்னக வீரர்கள் வடக்கில் அணிவகுத்துள்ளார்கள்; எல்லைகள் கீறும் நாளைய போரில், வடபுல வீரர்கள் தெற்கில் வேலிபோடுவார்கள்.

தமிழீழம் ஒன்றேதான் - ஒரு நாடு; ஒரு கொடி; ஒரு தலைவன்.

• • •

ஒரு ஆவணி மாதத்து அதிகாலை. கச்சான் காற்றின் மெல்லிய வருடல். வைகறைப்பொழுதில் சூரியக் குளியல். எழுவான்கரையின் உளமெல்லாம் உற்சாகம். சாளைவலைத் தோணிகளில் கரை திரும்பிக்கொண்டிருந்தது தேசத்தின் மீனவ சமூகம். "கெதியாய்ப் போயிட வேணும் குமார்..... கச்சான் வலுத்து தெண்டா மறுகா தண்டு வலிக்கிறது கஸ்டமா போயிடும்......" இவ்விரண்டு ஆட்கள், சிலதுண்டு வலைகளோடு படித்தெடுத்த மீன்கள்; கரை நோக்கிய வள்ளங்கள்.

பதினைந்து வயதேயான இளம் பராயம்; தேவைக்கும் அதிகமாகத் துளியும் பெருக்காத தேகம்: தோள்கள் திரண்டு, நெஞ்சு அகன்று, இடுப்பு ஒடுங்கி, கால்கள் வலுத்து - உடலை வருத்தி வருத்தி உழைத்ததால் இறுக்கமாகிய அழகுமேனி; சுருள் சுருளாகப் படரும் தலைமுடிகள்; முழு நிலவாக ஒளிரும் முகம்; சதா புன்னகைக்கும் கண்களின் ஆழத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தென்படும். அந்த சோகத்தின் மெல்லிய கீறல். நெற்றியில் சிந்தனையின் சுருக்க வரிகள். துடுப்பை வலித்து வலித்து குமார் நிமிர்ந்து நிலத்தைப் பார்த்தான். மேற்புறத் தொடுவானில் 'குடும்பிமலை'யும் 'தொப்பிக்கல்'லும் பனிமூட்டங்களினூடு மெல்லிய நீல முகடுகளாய்.. கண் குளிர்ந்த காட்சி.


தோணி கரையொதுங்கியது கடலுக்குள் இறங்கியவன் குனிந்து வள்ளத்திலும் தண்ணீரிலும் தொட்டு இரண்டு கைகளையும் நெஞ்சில் வைத்து கண்களை மூடினான். வலைகளை இழுத்து, பட்டிருந்த மீன்களை எடுத்து, கூடையில் நிறுத்து, விலைபேசி...... கச்சான் பலமாக ஊதத் தொடங்கிற்று. இரவு தொழிலுக்குப் போய் வந்தவர்கள் கண்ணாப் பற்றையோரங்களில் ஓய்வாக அரட்டையடிக்க, விற்போரும் வாங்குவோரும் நிறைய, களைகட்டிக் கலகலத்தது கடற்கரை குமாருக்கு அவசரம்; நேர நெருக்கடி; மிதிவண்டியை உருட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். "குமார் சாப்பிடாமல் போறான் ... அவனைச் சாப்பிடச் சொல்லுங்கோ....." -மீன் வாடிக்குப் பக்கத்திலிருந்த குடிலுக்குள்ளிருந்து ஒரு உடன் பிறவாச் சகோதரியின் பாசக்குரல் "குமார் சாப்பிட்டுட்டுப் போவன் தம்பி......"

"அக்கா தங்கைச்சிக்குப் பள்ளி துவங்கிற நேரமாயிற்றுதண்ணை ... ஏத்திப்போய் விடணும்..... நான் பிறகு வாறனண்ணை ..." குடிலுக்குள் எட்டிப் பார்த்து - "அக்கா வாரனுங்க......" சைக்கிளை உருட்டினான்.

"ம்......" குடிலுக்குள்ளிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு கச்சானோடு கலந்தது.

* * *

கல்குடா ஒரு பூர்வீகத் தமிழர் நிலம். கல்மடு அங்கொரு சிற்றூர். அண்ணார்ந்து பார்த்தாலும வறுமைக்கோடு தெரியாத ஆழத்தில் வாழ்ந்த மக்கள். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் சுந்தரபுரியாக மாறிவிட்ட தங்களூரில், மண்ணின் பண்பாடுகளையும், இனத்தின உன்னதங்களையும் கறைபடியாமல் காத்தார்கள் அவர்கள். அதிலொரு குடும்பம அவனுடையது.



**அற்புதமான போராளி; அசாதாரணமான வீரன்; கிடைத்தற்குரிய நண்பன்; மாண்பான மனிதன். வாழ்க்கையை அவன் கற்றுத் தரவில்லை; வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.**

சிங்களத்தைச் சரளமாகப் பேசியவன், உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டக்கூடிய அளவுக்கு ஆங்கிலமும் பேசினான். பகலில் அவனுக்கு அதுதான் வேலை. பக்குவமாய்ப் பாதுகாக்தும் இரண்டொரு நல்ல உடைகள் அவனுக்குத் துணை. சின்னவன்; நல்லவன்; பண்பானவன்; ஏழை. விடுதிச் சொந்தக்காரர் நாளாந்தம் அவனுக்கென ஊர்பார்க்கும் வெள்ளைக்காரர்களை வைத்திருப்பார். கூட்டிக்கொண்டு அவன் பகலெல்லாம் திரிவான். மானிடப் பண்புகளும், சீரிய ஒழுக்கங்களும் மலிவு விலைக்கு ஏலம்போன உல்லாச விடுதிகளில், உடலாலும் உள்ளத்தாலும் சேதப்படாமல் வாழ்ந்தவன்.

மாலையானதும் மீண்டும் ஓட்டம். மிதிவண்டியில் களைக்கக் களைக்க ஓடி பள்ளிக்கூட வாசலில் காவலிருப்பான். பள்ளிவிட்டதும் - அக்காவையும் தங்கையையும் திரும்ப வீட்டிற்கு ஏற்றிப் போவான். வீட்டு வேலைகளில் சின்ன ஒத்தாசைகள் செய்துவிட்டு, இரவானதும் கடற்தொழிலுக்குப் போகப் புறப்படுவான்.

இருள் கவிந்த அந்தி நேரம். மிதிவண்டியை உருட்டிக்கொண்டு அவன் படலைக்கு வர, பின்னாலே ஓடிவந்த தங்கச்சி கைகளில் பிடித்தாள். திரும்பினான். அக்கா அவனையே பார்த்தபடி வாசல் கதவோடு சாய்ந்திருந்தாள்; தங்கை ஏக்கமாய்ப் பார்த்தாள் -

"இண்டைக்கு மட்டும் தொழிலுக்குப் போகவேணாமண்ணா...... எங்க கூடவே இருங்கண்ணா ..." அவள் கேட்டது தங்களது மகிழ்வுக்காக அல்ல; அவனது ஓய்வுக்காக மட்டுமேதான். இரக்கமாய்க் கேட்டவளைப் பார்க்க பாவமாய் இருந்தது. தொண்டைக்குள் எதுவோ அடைக்க, குரலுக்குப்பதில் கண்ணீர்தான் வந்தது. தங்கையைக் கட்டி அணைத்துக்கொண்டான். கட்டுப்படுத்த முடியாத கண்ணீர் அவனுக்கும் வந்தது; அவளுக்கும் வந்தது. துன்பச் சிலுவைகள் சுமந்தனர் பிஞ்சுகள். துயரமே வாழ்வான வாழ்வு. தங்கையின் தலையில் தடவிக்கொண்டே அவன் சொன்னான் - "இண்டைக்கு நான் போகவேண்ணா...... நாளைக்கு நாம் சாப்பிட முடியாதம்மா"!

மிதிவண்டி அவனோடு உருளத் தொடங்கியது.

எதிர்பாராமல் ஒரு நாள் கண்களை மூடிக்கொண்டு துடிக்கவிட்டுச் சென்றுவிட்டார் அன்பு அப்பா! அடுத்து வந்த நாளொன்றில், தனியாகத் தவிக்கவிட்டுக் காணாமல் போனாள் அம்மா! துயரக் கடலில் தூக்கி வீசப்பட்டனர் பச்சைக் குழந்தைகள் துடுப்பற்ற படகாய் மிதந்தவர்களுக்கு துணையாகி வாழ்ந்தான் குமார்; அவன்தான் எங்கள் லக்ஸ்மணன். தோழர்களின் அன்புக்குரிய பொய்மரண்ணன்; சகோதரிகளைத் தனது நெஞ்சுக்கூட்டுக்குள் குடியிருத்தி வைத்திருந்த அன்புச் சகோதரன். சகோதரர்களில் ஒரு அசாதாரணமான பாசத்தைக் கொண்டிருந்தவன் அவன். தங்கச்சியிலதான் தனது உயிரையே வைத்திருந்தான். எல்லையற்ற அன்பால் பாதுகாத்து, எத்தனையோ கனவுகளோடு அவளை வளர்த்தான். அன்னையாகவும், தந்தையாகவும் அண்ணனாகவும், தம்பியாகவும் - அவர்களுக்கு எல்லாமாகவும் அவனே வாழ்ந்தான். தனக்குக் கிடைக்காத கல்வி அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு அவன் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல; அனுபவித்த கஷ்டங்கள் சொற்பமல்ல. அவர்களுக்காக, சுமைகளில் அழுந்தியவனைப் பார்த்து, அவன் அறியாமல் அவர்கள் அழுவார்கள். கடுங்குளிருக்குள் அலைகளோடு மாரடித்துவிட்டு வருபவன், பகல் வெயிலுககுள் வெளிநாட்டுக்காரர்களோடு அலைந்தான். பாவம். ஓய்வே இல்லை...... ஓயவே இல்லை......!

ஆனையிறவுச் சமரில் உலகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது எங்கும், எவரிலும் அதே பேச்சு; அதே சிந்தனை. புலி வீரர்களை ஈன்ற தாய்மார்கள் மட்டுமல்ல, திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் இருந்த தோழர்களும் தவித்துக்கொண்டுதானிருந்தார்கள். பெரும் சமர்க்களம் ஒன்றில், இயக்கத்தின் ஒரு பெரிய தொகுதி வீரர்கள் போரிட்டுக்கொண்டிருக்கும்போது, அந்தக் களத்திற்கு அப்பால் நிற்கும் ஒரு போராளியாலும்கூட அமைதியாக இருக்கவே முடியாது. இந்த மனப் போராட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்கள் விடுதலைப் புலிகளின் போராளியாக இருக்கவேண்டும். சந்திவெளித் திடலிலிருந்த 'கிலோ வண்' முகாமின் போராளிகளும் இதே தவிப்போடுதான் தகவல் தொடர்பு சாதனத்தைச் சூழ குழுமுவார்கள். ஒவ்வொரு காலையிலும் வரும் களநிலைச் செய்திகள். வீழ்ந்தவர்களின் நீண்ட பட்டியலைத் தருகின்றபோது - ஆன்மா துடிக்கும். அந்த ஒரு காலை; அவர்கள் காத்திருந்த வேளை - தரையிறங்கி நகர்ந்த படையினரை எதிர்கொண்ட நேற்றைய சண்டையில் களப்பலியானோர் பெயர்கள்...... வரிசையாய்...... ஒன்றன்பின் ஒன்றாய்..... அதிலொன்றாய்......! "லெப்ரினன்ற் சுனேத்ரா! - வேலாயுதபிள்ளை ஜெயந்தி, கல்மடு, கற்......! மட்டக்......!......" அவன் அதிர்ந்ததை...... முகம் இறுகியதை...... நிலை குலைந்ததை...... அருகிலிருந்தவர்கள் கவனிக்கவேயில்லை. "அம்மான்! ......என்ர தங்கைச்சி......" என்று விம்மியபோது, பக்கத்திலிருந்த தோழனின் கைகளில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதபோது, நண்பர்கள் விக்கித்துப்போனார்கள்.

கெட்டிக்காரி; கல்வியில் சிறந்து விளங்கியவள்; விவேகமானவள் - 'ஸ்டெதஸ்கோப்' வளைந்து தொங்கும் தோள்களோடு அவள் ஒய்யாரமாக நடந்து வருவதைக் கண்நிறையப் பார்க்கக் காத்திருந்தவன்; காலம் அவளது தோள்களில் துப்பாக்கியைத் தொங்கவிட்டுக் களத்திற்கு அனுப்பியபோதும் வருத்தப்படாதவன் -

"என்ர தங்கைச்சி!......என்னை விட்டுட்டுப்

போட்......''- சொல்லிச் சொல்லி அழுது கொண்டே இருந்தான்.

• • •

லக்ஸ்மணன் -

பொம்மர் -

மற்றவர்களிடம் காண முடியாத சில அபூர்வ தன்மைகளைக் கொண்டிருந்ததால் - மெதுவாக, ஆனால் உறுதியாக வளர்ந்து, மேல் நிலைக்கு உயர்ந்த ஒரு புரட்சி வீரன்.

தென் பிராந்திய யுத்த அரங்கில், தன்னிகரில்லாப் போர் நாயகர்களாக விளங்கிய குறிப்பிடத்தக்கவர்களுக்குள் - தானும் ஒருவனாக ஒளிர்ந்த சண்டைக்காரன்.

களமுனையில் மாறுபடும் தளநிலைமைகளின் போக்குகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பதிலிருந்து, பொறுப்பெடுத்த பணிகளை எவ்வளவு விரைவாகவும் எவ்வளவு சுலபமாகவும் ஆற்றிமுடிக்க இயலுமென்பதையே சிந்தித்துச் செயற்படுத்துவதுவரை - எதெதிலெல்லாம் ஈடுபட்டானோ அததிலெல்லாம் - அவன், மதிநுட்பத்தோடு காட்டிய அசாத்திய துரிதத்திற்காகவே 'பொம்மர்' என்பது அவனது மறுபெயர் ஆனது. முற்றுமுழுதாகவே அது காரணப்பெயர்தான். ''பொம்மரண்ணா! பொம்மரண்ணா ......! !'' என்று ஒரு கூட்டம், பொழுதெல்லாம் அவனைச் சுற்றிக்கொண்டே திரியும்.

அவன் -

அதிர்ந்து அனல் கக்கும் படைக்கலங்களின் முன்னால், துணிந்து களமாடும் ஒரு போர்வீரன்; சிக்கலாய் இறுகும் சண்டைகளையெல்லாம், நுட்பமாய் வென்றிடும் ஒரு தளபதி; நம்பி வேலைகளைக் கொடுத்துவிட்டுப் போனால், இம்மியும் பிழையாமல் முடித்திடும் செயல் வீரன்; ஒருநாள் அவனுடன் பழகக் கிடைத்தாலும் ஒருநாளும் அழியாத நினைவாகும் நண்பன்; இடையறாத போராட்ட அனுபவத்தில், இனங்காணப்பட்ட ஒரு நேர்த்தியான பொறுப்பாளன்; விரிவுரை நிகழ்த்துகையில், ஒரு படையியல் பேராசான்; தேடிக்கேட்டுப் படிக்கையில், ஒரு அடக்கமான மாணவன்; கட்டுப்பாடாய் - ஒழுக்கமாய் - தமிழினத்தின் பண்பாட்டு நெறி பிறழாத மனிதனாய் வாழ்ந்து, இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்து நின்ற புலிகளின் போராளி; ஆலோசகனாகி, அறிவுரைகள் சொல்லி, தளபதி கருணாவின் தோளோடு தோள் நின்ற அந்தப் படைவீரன்- சாதனை செய்து, சரித்திரம் படைத்து, பிரபாகரன் என்ற தலைவனுக்கு பெருமையினைத் தந்த புலிவீரன்.

ஆயித்தியமலை. வரம்புயரத்திற்கு நீருயர்ந்து, நீருயரத்திற்கு நெல் உயர்ந்திருக்கும் வயற்சேனை; அது - நீண்டு விரிந்துகிடக்கும் பரந்த வெளி; ஒரு கரையிலிருந்து மறு கரை பார்த்தால், நான்கைந்து கிலோ மீற்றருக்கு ஈ எறும்பே இல்லாத வெட்டைத் தரை. நெற்கதிரைத் தவிர மண்மட்டத்திற்கு மேல் மங்கலாயும் ஏதும் தெரியாத புவியமைப்பு. இந்தச் சேனை நிலத்தை சரி நடுவாகக் குறுக்கறுத்துப் போகிறது - கரடியனாறையும் உன்னிச்சையையும் தொடுக்கும் பெருந்தெரு. இந்த வீதியால் நாளாந்தம் நடை ரோந்து போனது, சிங்கள அதிரடிப் படையணி ஒன்று. இந்த வெட்டை நிலப்பாதையில் வைத்து அந்த அணி மீது தாக்குவது பற்றிக் கதைத்தால், தேர்ந்த ஒரு படைத்துறை நிபுணன் 'முட்டாள்' என்பான். ஏனென்றால் - தாக்குதலுக்குச் சாதகமே இல்லாத தளநிலைச் சூழல் அது. ஆனாலும், தாக்குதலை நடாத்துவது என முடிவெடுத்தான் லக்ஸ்மணன். புலிகள் இயக்கத்துக்குரிய தனித்துவம் அதுதான! ஏற்கெனவே தலைவர் சொல்லியிருப்பதைப்போல,''அதீதமான தன்னம்பிக்கைதான் எங்களது பலமும்; பலவீனமும்.'' பாதகமானது எனக் கருதப்பட்ட அதேகாரணத்தையே அவன் சாதகமாக்கினான். எதிர்ப்பை எதிர்பாராமல் எதிரி கவனயீனமாக நகரும் வேளை - அவதானமற்ற அலட்சியமாகவும், உசார் நிலையற்ற உல்லாசமாகவும் காலாற நடை பயிலும் அந்தப் பகைப் படையணி, ஒரு வாய்ப்பான இலக்குத் தான்!

தானே நின்று பொம்மர் வேவு பார்த்தான்; இடம் தேர்ந்து, நாள் குறித்தான்; வீரர்களை ஒழுங்குபடுத்தித் தயாரானான். தளபதி கருணா ஒப்புதல் தந்தார்; புறப்பட்டான்.

உருமறைப்பு - போரில் இது ஒரு முக்கிய அம்சம். தாக்குதல் நடவடிக்கைகளின்போது இன்றியமையாத ஒரு பாத்திரம் இதற்குண்டு. உருமறைப்பானது, எதிரிக்கு எம்மை மறைப்பதுடன் எமது தந்திரோபாயத்தையும் மறைக்கின்றது. அதனால், தாக்குதலின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் அதுவும் பெரும்பங்கு வகிக்கின்றது. களத்தைத் திறப்பது நாங்களாய் இருக்கவேண்டும்; அவனாய் அல்ல.

ஒவ்வொரு வீரனாக லக்ஸ்மணன் தானே உருமறைத்துவிட்டான். போரின் இந்தத் தனிக் கலை - அவனுக்கு ஒரு கைவந்த கலை.

வரம்போடு வரம்பாக, நீரோடு நீராக, நெல்லோடு நெல்லாக,புல்லோடு பூண்டாக -... காத்திருந்தார்கள்; பாயத் தயாரான புலிகள் பதுங்கிக் காத்திருந்தார்கள். வந்துகொண்டிருந்தான் - சாகத் தயாரான வகையில் பகைவன் வந்துகொண்டிருந்தான்.

பார்க்கின்ற தூரத்திலிருந்து கேட்கின்ற அளவுக்கு நெருங்கினான் - எட்டித் தொடக் கூடியவாறு ..இதோ பகைவன்! பக்கத்தில் ....!! கணக்கான இடைவெளி - சரியான தருணம் - வெற்றிக்குரிய மணித்துளி இதுதான்! தீப்பொறிக்கும் 'ஜீ திறீ' யோடெழுந்து, ஆட்டத்தைக் கோலாகலமாக ஆரம்பித்துவைத்தான், லக்ஸ்மணன். ஆவேசத் தாக்குதல்! உயிர் சிலிர்க்க வைக்கும் சண்டைக் கணங்கள். வெட்டைவெளித் தரையில், இந்த உச்சிப் பகற்பொழுதில் எங்கிருந்தையா வந்தனர் புலிகள்......? நடப்பதென்னவென உணரும் முன்னரே சுருண்டு விழுந்தனர் பகைவர்.சிங்களக் கொமாண்டோ அணி தன்னில் 14பேரை பிணங்களாய் இழந்தது. தப்பியோடியவர்கள் தப்பிப்போனமை ஏதோ கடவுள் கிருபையால்தான். என்ன அதிசயம் பாருங்கள், புலிகளுக்குச் சொந்தமான ஒரு துளி இரத்தமும் சிந்திடாமல் பெற்றெடுத்த வெற்றி அது!

'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்பதற்கு, சாலப் பொருத்தமானவன் அவன். வெளித் தோற்றத்தால் என்றல்ல, உள்ளத்து அழகினால் எங்களது உள்ளங்களை ஊடுருவி வாழ்ந்த ஒரு அற்புதமான நண்பன். அவனது அகத்திலும் முகத்திலும் மிளிர்ந்த பேரழகு, எல்லாரையுமே வசீகரித்ததென்றால் மிகையே அல்ல. இனம் புரியாத அந்த ஈர்ப்புச் சக்தியின் வீச்செல்லைக்குள் அகப்படாதவர்களே இல்லை. எவரையும் கவரும் அபூர்வம் அவனில் மறைந்து கிடந்ததை நாங்கள் கண்டோம். எங்கும், எப்போதும், எவ்விதமாகவும் எடுத்துக்காட்டிச் சொல்லக்கூடியவனாக வாழ்ந்த - மாண்பான மனிதன் லக்ஸ்மணன்.

ஒரு மேற்சட்டை, ஒரு காற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் - கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாமல் லக்ஸ்மணன் ஓராண்டைச் சமாளிப்பான். கந்தையாகக் கந்தையாகக் கசக்கிக் கட்டி - சிக்கனமாய் வாழ அவன் கற்றுத்தரவில்லை; அப்படியாக வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.



## போராளியின் குருதிச்சுவடுகள்

மட்டு-அம்பாறைப் பிராந்திய துணைத்தளபதி
**லெப். கேணல் லக்ஸ்மணன்**
**(பொம்மர்)**
வேலாயுதப்பிள்ளை - ஜெயக்குமார்
கல்மடு, கல்குடா, மட்டக்களப்பு.
23. 05. 1968 - 28. 11. 1994

ஈடுபட்ட பணிகளிலெல்லாம் ஈடுபாட்டோடு இயங்கி - ஆற்றல், புலமை, திறமை அனைத்தையும் அர்ப்பணித்து - வரலாற்றில் முத்திரையைப் பதித்தவர்கள் எண்ணக்கூடியவர்கள்தான். லக்ஸ்மணனும் - அவர்களில் ஒருவனாகி, தலைவரின் விருப்பத்திற்குரிய ஒரு போராளியாகி, அவரது சிந்தையைக் கவர்ந்து உயர்ந்தான்; அந்த உயர்ச்சி '' லக்ஸ்மணனைப் போல ....'' என அவர் முன்னுதாரணம் காட்டுகின்ற உன்னதத்தை அவனுக்குப் பெற்றுத் தந்தது.

அவன் நின்ற இடம் சிறப்பைப் பெற்றது. அவனிடம் நின்றதால் குழுவொன்று மதிப்பைப் பெற்றது. சமையலில் உரிசை; விளையாட்டில் திறமை; வேலையில் வேகம்; சண்டையில் வீரம். '' பொம்மரண்ணான்ர குறூப்'' பிற்கு தனிப் பேர் இருந்தது; ஏனைய குழுக்களிலிருந்து வேறுபாடு அப்பட்டமாய்த் தெரிந்தது.

காடென்ன? மலையென்ன? கடும் குளிர்தானென்றால் என்ன? நடுப்பகல் வெயிலென்ன? நள்ளிரவுப் பொழுதென்ன......? பொம்மரண்ணா வேலைக்கென்றால் பின்னுக்கு நின்றவர்கள் கிடையாது; பின்னுக்கு நிற்பாட்ட ஆளே கிடையாது.

பெரும் தாக்குதலுக்குப் புறப்படும்போது, அவனது ஒழுங்கமைப்பைப் பார்க்கலாம். தாக்குதற் திட்டம் பெரிதாகும்போது, தயார்ப்படுத்தல் மிகப் பெரிதாய் இருக்கும். தயார்ப்படுத்தல் பெரிதாகும்போது, அவனுக்கே அது ஒரு சுமையாய் குவியும். எல்லாச் சுமைகளையும் தானே ஏற்பதால், அவனது தளபதிகளுக்கு வேலைப்பளு குறையும்.

பானை சட்டி எடுத்து, பருப்பு அரிசி பொதி செய்து, படைவீரருக்கு ரவை எண்ணி, மருந்துப் பெட்டியில் பொருள் பார்த்து -... ஒவ்வொரு 'கிளைமோரு'க்கும் இடம் காட்டி, ஒவ்வொரு வீரனுக்கும் நிலை காட்டி, ஒவ்வொரு அங்கலமாய் வியூகம்போட்டு...... சென்று, வென்று, மீண்டு வருமவரை, ஒவ்வொரு அடியிலும் அவனது உழைப்பிருக்கும்.

லக்ஸ்மணன் - நீங்காத நினைவுகளாய் ஆழ்மனதில் பதிந்துபோன அடலேறு அவன். ஒன்றை நினைக்க இன்னொன்று வருகின்றது. அதை நினைக்க வேறொன்று வருகிறது வருவதை நினைக்க அடுத்தது வருகின்றது...... ஓயாத எண்ணங்களாக நினைவுகளின் தொடரசைவு...... நினைவுகள் அழிவதில்லை; அழிவதேயில்லை.

பயிற்சியில் நாங்கள் சோம்பலாகி பம்மாத்து விட்டபோது, பக்கத்தில் நின்று தெம்பாக்கி சேர்ந்து வளைந்தவன்; தளத்தைச் செப்பனிட நாங்கள் கிடுகு காவி கூரைவேய, கம்பு தூக்கி மூடை அடித்துக் கூடவே முறிந்தவன். பிழைகள் இழைத்து நாங்கள் தவறுகள் செய்த போது, பக்குவமாய் அணுகி எம்மை அன்பால் திருத்தியவன்; தவறுகள் செய்துவிட்டு நியாயம் சொல்வோர் மத்தியில், தனது தவறுகளைச் சுட்டியபோது அமைதியாய் ஏற்றுக்கொண்டவன். தவறுகளுக்காக தண்டனைகள் தந்தபின்பும், மென்மையாய் விளக்கி அறிவுரை சொன்னவன். கீழ் இருக்கும் போராளி பெரிதாய்ச் செய்தபோது, மேல் இருக்கும் தளபதியிடம் இனங்காட்டிவிட்டவன். கண் திறப்பான் என்று நாங்கள் காத்திருந்தபோது, கண்திறக்கவில்லை அவன் - காவியமாய் ஆனான்.

நினைவுகள் அழிவதில்லை; அவை அழிவதேயில்லை!

வாவிகளில் மீன்பிடித்து வந்து கறியாக்கித் தந்தான் - உண்டு சுவைத்தோம். 'காண்டைக் காட்டுச்' சண்டைக்குப்போய் ஆறு கடக்கத் திக்குமுக்காடியபோது 'வெல்லங் கம்பில்' கயிறு திரித்து ஆறு கடத்திக் கூட்டிப்போனான் - வென்று மீண்டோம். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வீரனாகினான் - சேர்ந்து மகிழ்ந்தோம். நீருக்குள் மீனாகி நீந்தினான் - பாாத்து வியந்தோம். ஆறிழுத்துப்போன தோழர்கள போனவர்தானென ஊக்கித்தவேளை, நீரிழுத்துப் போகாமல் மீட்டெடுத்துப் போட்டான் - அதிர்ந்து இன்புற்றோம். மேற்கத்தைய இசையில் கிற்றார் துணையுடன் 'சொற்றுணை வேதியனை...' மணியாய்ப் பாடினான் - கூடிக் குதூகலித்தோம். பானு அண்ணனோடு வேக நடைப் போட்டியில் நாரி வருத்தத்தால் பின் தங்கிப் போனான் - நாமும் வருந்தினோம். தளத்தில் நிகழ்ந்த ஆணழகன் போட்டியில் தசைகளை முறுக்கி எண்ணெய்யில் ஜொலித்தான் - பாாத்து இரசித்தோம். காத்திருந்து நாங்கள் பரிதவித்துப் பார்த்திருக்க பூத்துவிழி சிரியாமலே..... பூ உதிர்நது போனான் - உயிருக்குள் அழுகின்றோம்.

நினைவுகள் அழிவதில்லை; அவை அழிவதேயில்லை.....

• • •

சண்டை செய்யத் தெரிந்தவன், சண்டையைச் செய்விக்கவும் தெரிந்தவன். போராளிகளை நிர்வகிக்கத் தெரிந்தவன், போரை நிகழ்த்தவும் தெரிந்தான்...... களங்களிற்குத் திட்டமிடத் தெரிந்தவன்,சமர்களை வெல்லவும் தெரிந்தவன்...... லக்ஸ்மணன் ஒரு போரியல் வல்லுனன்தான்; போரின் ஒவ்வொரு கூறிலும் அவன் தலைசிறந்து விளங்கியவன்; படைத்துறையில் ஒரு நிபுணனாகவே திகழ்ந்தவன். அவன் பங்கேற்ற களங்களிலெல்லாம் ஒரு All Rounder ஆக - சகலகலாவல்லவனாக - மட்டுமல்ல, Man of the Battle ஆக - அந்தக் களத்தின் நாயகனாகவும் விளங்கியவன்.

'ஜீ திறீ ஏ திறீ' - G3 A3 சுரிகுழல் துப்பாக்கிதான் சிறுரக சுடுகலன்களுள் அவனது விருப்பத் தேர்வு தலைவர் அவர்களுக்கும் அது பிடித்தமானது; 'ஹெக்லர் அன்ட் கொச்' நிறுவனம் உருவாக்கிய பெருமையைப் பெற்றது.

சிறிப்பாயும் சன்னங்களினூடு 'ஜீ திறீ' யோடு அவன் முன்னேறும் விரைவு சண்டைக்காரர்களையே அசத்தும். சுட்டுக்கொண்டிருக்கும் பகைவனைச் சுட்டு வீழ்த்தும் வேகம்...— அந்த வேகத்தோடேயே அடுத்தவனைக் குறிவைக்கும் லாவகம்...... அதே சமநேரத்திலேயே வீரர்களை நகர்த்திச் செல்லும் திறமை ... பார்ப்பவர்களை அதிசயிக்கவைக்கும். தொய்ந்துகொண்டிருக்கும் சண்டைக்குள் அவன் புகுந்தால், புலிகள் பிய்த்துக்கொண்டு பாய்வார்கள். 'வோக்கி'யில் அவனது குரலைக் கேட்டாலே, அவர்களுக்குள் புதுத் தெம்பு புகுந்து விளையாடும். மூக்கென்றால் மூக்கு, கண்ணென்றால் கண், நெஞ்சென்றால் நெஞ்சு - சொல்லிச் சுடுவான்

# இவை போதும்!

அன்பான மனைவி

ஆசைக் கொன்று
ஆஸ்திக் கொன்றென
அளவோடு பிள்ளைகள் இரண்டு



எனினும்…—
கைகளில் ஆயுதமேந்தி

எல்லைப் புறத்து
காவலரண் ஒன்றில் நானும்
காவிய நாயகன் எங்கள்
தேசியத் தலைவன் இட்ட
புனிதப் பாதையில் தடம் பதித்த

"நிறைவு" எனக்கு……

ஒரு புலிவீரனைத் தன்
துணைவனாய்த் தேடிய
"பெருமை" என் மனைவிக்கு

நாளை என் மகன்
பள்ளி செல்வான்

"அப்பாவின் தொழில் யாது?"

வாத்தியின் கேள்விக்கு
வைத்தியர், எஞ்சினியர் வெளிநாட்டில் என
ஒவ் வொருத்தராய்ப் பதில் சொல்ல,

நெஞ்சு "நிமிர்த்தி"
பதில் இறுப்பான்……
என்மகன்
"என் அப்பன் ஒரு புலிவீரன்"
இவை போதும் - ஈழமதில்
தமிழனாய்ப் பிறந்ததன்
பயன் நிறைவுற……! ○

தே. தமிழரசன்

# காத்திரு

காத்திரு எனச் சொன்னவன்……
களமாடி கண்ணொன்றை இழந்த பின்னும்
எனைக் காத்திரு என்றவன்……

கால ஓட்டத்தில்
கடலில் கரைந்து காவியமானவன்……
அப்பவும் சொன்னான்;
"எனைப் போல் களமாடி
கடலின் மடியில்
தலை சாய் அப்போ -
உனக்காக நான் காத்திருப்பேன்!"

அவனின் உணர்வில்
நான் எழுந்தேன் -
அவனின் தியாக ஓட்டத்தில்
நான் கலந்தேன்.
நாளை நான் கடலின்
மடியில் தவழலாம்
அப்போ,
நானும் நீயும்
இணையலாம்,
நிஜவாழ்வில் அல்ல
நிழலிலே!

அதுவரை எனக்காய் நீ காத்திரு! ○

❋ இவ்விரு கவிதைகளும் இரண்டு போராளிகளால் எழுதப்பட்டவை யாகும்.

லக்ஸ்மணன் - மில்லி மீற்றரும் விலகாது; நம்பி வைத்திருந்த 'ஜீ திறீ'யும் அவனுக்குத் துரோக மிழைத்தது இடையாது…… அவனொரு அசகாய சூரன்.

தளபதி கருணாவின் நேரடிக் கவனிப்பின் கீழிருந்த பிரத்தியேக தாக்குதலணியின் கொமாண்டராக லக்ஸ்மணன் 'நியமிக்கப்பட்டிருந்தான். மட்டு - அம்பாறை மாவட்டப் படையணியில் இவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அங்கு போரிட்டாலும் சரி, எங்கு போரிட்டாலும் சரி லக்ஸ்மணன்இல்லாமல் அந்தப் படையணி சண்டையிட்டதேயில்லை. அவனை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கலாம்; எப்பேர்ப்பட்ட தாக்குதலுக்கும் திட்டமிடலாம். "பொம்மரண்ணை ரகுறாப்இறங்கிறது எந்தப் பக்கம்……?" என்பதை அறிய, தாக்குதல் திட்ட வரைபடத்தைச் சுற்றி போராளிகள் ஆவலாய் நிற்பது வழமை. எதிரியின் பலமான அரணென்று கருதும் மிகவும் இறுக்கமான ஒரு பகுதி லக்ஸ்மணனின் அணிக்கு ஒதுக்கப்படும்; திட்டம் செயல் வடிவம் பெறும்போது, முதலில் வீழும் பகுதியும் அதுவாகத்தானிருக்கும். எங்களுக்கு 'பொம்மரால்' வான்வழியால் மட்டும்தான் பிரச்சினை; பகைவனுக்கோ, 'பொம்மரால்' கால்வைத்த இடமெல்லாம் பிரச்சினை. அவனது. பேரைக் கேட்டாலே ஒரு கலக்கம்; 'வோக்கியில்' குரல் கேட்டால் நடுக்கம்; எதிரிக்கு அவனென்றால் நடுக்கத்தோடு காய்ச்சல். இது 'உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.'

உன்னிச்சையில் இடர்பாட்டுக்குள் சிக்கிய ஒரு பலமுனைத் தாக்குதல். மேஜர் லத்தீப் போடு இன்னும் சிலரை, எதிரியின் எல். எம் ஜி. ஒன்றுவிழ்த்திற்று. அந்தமுனையில் வியூகம் குலைந்தது; சண்டை குழம்பியது; வீரர் தடுமாறிய நேரம். அந்த எல். எம். ஜியின் நிறுத்தமற்ற கதறல் முழுத் தாக்குதலையுமே பிசகிவிடச் செய்யக்கூடிய இக்கட்டான தருணம். பொருத்தமானவனாகத் தேவைப்பட்டான் இன்னொரு முனையில் நின்ற லக்ஸ்மணன். எல். எம். ஜி அரணுக்கு நேரெதிராக ஒரு அணியை இறக்கி கவனத்தைத் திசைதிருப்பிவிட்டு, எதிரியின் பார்வையில் படாமல் தூரத்தால் வளைந்து நகர்ந்து, அந்த அரணைப் பின்பக்கத்தால் நெருங்கி பிடரியில் தாக்கினான். அந்த எல். எம். ஜி புலிகளின் கைக்கு வந்ததுடன் சண்டையின் போக்கு புலிகளின் சார்பாகத் திசைமாறிய பின்னர் - வெற்றியும் புலிகளின் கைக்கே வந்தது.

முதலாவது ஈழப்போரில் பிரசித்திபெற்றது வடமராட்சித் தாக்குதல் - அப்போது மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு படையணியில் அவன் சாதாரண போர்வீரனாகப் பங்கேற்றான்; இரண்டாவது ஈழப்போரில் சரித்திரம் படைத்தது பூநகரித் தாக்குதல் - இப்போது மட்டக்களப்பிலிருந்து பங்கேற்ற ஒரு படையணியில், ஒரு பகுதிக்குப் பொறுப்பாக லக்ஸ்மணன் படை நகர்த்தினான்.

நாகதேவன்துறை இறங்கு தளத்தை கடற்புலி வீரர்கள் வளைத்துக்கொள்ள - ஞானிமடம் முகாமையும், அதற்கு அரணாய் அமைக்கப்பட்டிருந்த காவலரண் தொகுதிகளையும் உள்ளடக்கிய - கடற்படைத் தளத்தை மட்டக்களப்புப் படையணி முற்றுகையிட்டது.

தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகத்தில், கறுக்காய்த்தீவுப் பகுதி முன்னணிக் காவலரண் வரிசையைத் தகர்த்தெறிந்து பாதை திறந்து, ஞானிமடம் முகாமை அந்தப்பக்கத்தால் தாக்க வேண்டியது லக்ஸ்மணனின் தாக்குதற் பிரிவுக்குரிய பணி.

கிழக்குப் பகுதியால் இவர்கள் முகாமை நெருங்கும் அதே சமநேரத்தில் - தளத்தினது தெற்குப் பகுதியில் - பூநகரியிலிருந்து வரும் பிரதான வீதியோரக் காவலரணகளை உடைத்துக்கொண்டு உள்நுழையவேண்டிய இன்னொரு தாக்குதற் பிரிவு. சிக்கல்பட்டுவிட்டது.

தென்பகுதியில் எதிரி பலத்த எதிர்ப்பைக் காட்டியதால். அந்த அணி உட்புகுவது கைகூடவில்லை. சண்டை நீள நீள அணி சேதப்பட்டுக்கொண்டே இருந்தது; சேதப்பட்டுக்கொண்டேயிருக்க அணி பலவீனமாகிக்கொண்டே போனது. குறிப்பிட்ட நேரத்தில் அந்த அணி லக்ஸ்மணனின் தாக்குதற் பிரிவுக்குத் துணையாக வந்து சேராததினால், முகாமைத் தாக்குவதும் சாத்தியப்படவில்லை.

சமர் நீண்டுகொண்டிருந்தது; வீரர் வீழந்துகொண்டிருந்தனர்; இரவு விடிந்துகொண்டிருந்தது; நிலைமை பிசகிக்கொண்டே போனது. உடனடியாக மாற்றுவழி ஒன்று தேடவேண்டிய கணங்கள். தென்பகுதியில் இறங்கிய தாக்குதலணிக்குப் புதுப்பலம் சேர்த்து. ஒரு அகோரத் தாக்குதலை நிகழ்த்தி, அரண்களை உடைத்தெறியவேண்டும். தளபதி பானு தீர்மானித்தபோது, மனக்கண் முன்னால் லக்ஸ்மணன்தான் நின்றான். இத்தகைய. இறுக்கமான சூழ்நிலைகளை இளக்கிவிடுவதற்குரியவன் அவன்தான்.

கிழக்குப் பகுதியிலிருந்த அணி பின்னுக்கு எடுக்கப்பட்டு தென் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது குழுக்கள் துரிதமாக மீள ஒழுங்கமைக்கப்பட்டன. உடனடித் தாக்குதற் பிரிவொன்று உருவாக்கப்பட்டது லக்ஸ்மணன் தான் கொமாண்டர். மூர்க்கத்தனமான ஒரு தாக்குதல். கணிக்கப்பட்ட நேரத்திற்குள் காரியம் முடிய தெற்குப் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்தெறிந்துகொண்டு. புலிகளின் தாக்குதற் பிரிவுகள் ஞானிமடம் முகாமைச் சுற்றி முற்றுகையிட்டன. பூரணமாகவே புலிகளுக்குச் சார்பான தளநிலை பிறந்தது. எனினும் - பொழுது விடிந்து விட்டதால் முகாம் தாக்குதல் அடுத்த இரவுக்கு ஒத்திப்போடப்பட்டது.

மூன்றாம் நாள் மாலை - ஞானிமடம் கடற்படை முகாமை அழித்து. பூநகரிக் கூட்டுத்தளச் சமரை வென்று. புலிகளின் படையணிகள் வெற்றிவாகையோடு மீண்டு வர-

லக்ஸ்மணனை, மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியத்தின் துணைத் தளபதியாக தலைவர் அவர்கள் நியமித்தார்.

தென்பிராந்தியப் படையணி புனருத்தாரணம் செய்யப்பட்டு - புது மெருகூட்டப்பட்டு - புதிய நிர்வாகக் கட்டமைப்புகளுடன் மட்டக்களப்புக்குப் புறப்பட்டபோது - எவ்வளவு குதூகலத்தை அவனில் கண்டோம்!

தளபதி ராம் இற்குத் துணைச் சேனாதிபதியாக அவன்……

எத்தனை கனவுகள்…… எத்தனை கற்பனைகள்…… தென்தமிழீழமெங்கும் புலிக்கொடி கட்டும் ஆசைகள் ……

கட்டுமுறிவுக்குளம் தாக்குதலில் பாதிப் பொறுப்பெடுத்துச் சென்றவன், பூமாஞ்சோலைத் தாக்குதலில் முழுவதையும் பொறுப்பெடுத்தான். மட்டு நகரிலிருந்து ஏழே கிலோ மீற்றர் தூரம்தான். சற்றுச் சிக்கலான இலக்கு. சிக்கெடுத்துச் சிக்கெடுத்துப் பழகிப்போனவன் - முடிவெடுத்தான்.

படையாய்ச் சென்றனர்; பகையை வென்றனர். மீளத் திரும்பிட அவர்கள் தயாரான வேளை— அதிர்ந்த ஒரு வெடியோசையோடு அந்தத் துயரம் நிகழ்ந்தது!

போரெடுத்துப் போரெடுத்துப் பகைவனை அழித்துக்கொண்டேயிருந்த எங்களின் பொம்மரை. மறைந்து கிடந்த ஒரு பகையாளன் 'கிரனேட்'டால் வீழ்த்திவிட்டான்.

எட்டாண்டு காலமாக ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனை, கைக்குண்டின் சிதறல்கள் சுயநினைவற்றுவீழ்த்தின. "பொம்மரண்ணா …! பொம்மரண்ணா … !!" என்று மௌனமாய்க் கதறிய தோழர்களின் மடியில் சாவோடு போராடிய அந்த வீரன் -

மரணத்தை வென்றான்; மனங்களில் நிறைந்தான் - எம்முள் நிலையான நினைவானான்!

அவனது பேர் சொல்ல - அவனது கைகளில் வளர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள், தானை வீரர்களாகவும் தளபதிகளாகவும் இன்று அணிவகுத்துள்ளார்கள்.

மகிழடித்தீவிலிருந்து புங்குடுதீவுவரை தமிழன் வென்றெடுக்கும் நாளினுக்காக அவர்கள் போரெடுப்பார்கள்! போரெடுப்பார்கள்!! லக்ஸ்மணனின் புதைகுழி மீதினில் புலிக்கொடி நாட்டுவார்கள்! ○

# கந்தளாய் குடியேற்றத் திட்டம்

திருகோணமலை மாவட்டத்தின் தென் மேற்குப் பகுதியில், தம்பலகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பாரிய குளமே கந்தளாய்க் குளமாகும். குளக் கோட்டன் காலத் திராவிட நாகரிகத்தின் வெளிப்பாடாக இருந்த கந்தளாய் இன்று, சிங்கள ஆதிக்கத்தின் பிடியில் உள்ளது. இலங்கையின்சுதந்திரத்தினைத்தொடர்ந்து, விவசாய நீர்ப்பாசன அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதன்மூலம் தமிழ்த் தேசியத்தினைச் சிதைப்பதற்குத் திட்டமிட்ட சிங்களப் பேரினவாத அரசு, 1949 – 50 காலப்பகுதியில் கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தினை ஆரம்பித்தது.

இக்குடியேற்றத் திட்டத்தில் முதல் தொகுதியாக 738 குடும்பங்கள், 1953ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் அநுராதபுரம் வாசிக்கும் மேற்பட்டோர் சிங்கள மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு குடியமர்த்தப்பட்டவர்களாவர். இவர்களுக்கு 2214 ஏக்கர் நெல்நிலமும் 1476 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 3690 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 1954ஆம் ஆண்டு இரண்டாவது தொகுதியாக 818 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் 368 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். மிகுதி 450 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து இங்கு குடியமர்த்தப்பட்டவர்களாவர். இவர்களுக்கு 2454 ஏக்கர் நெல் நிலமும் 1636 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 4090 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 1955ஆம் ஆண்டு மூன்றாவது தொகுதியாக 756 குடும்பங்கள் இக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் 456 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டனர். 300 குடும்பங்கள் திருக்கோணமலை மாவட்டத்தினைச் சார்ந்தவர்களாவர். இவர்களுக்கு 2268 ஏக்கர் நெல் நிலமும் 1512 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 3780 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு நான்காவது தொகுதியாகக் குடியமர்த்தப்பட்ட 205 குடும்பங்களில் 105 குடும்பங்கள் இம் மாவட்டத்தைச் சார்ந்தவையாகும். மிகுதி 100 குடும்பங்களும் சிங்கள மாவட்டங்களைச் சார்ந்தவையாகும். இக் குடும்பங்களுக்கு 615 ஏக்கர் நெல் நிலமும் 410 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 1025 ஏக்கர் நெல் நிலம் வழங்கப்பட்டது.

கந்தளாய்க் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முதல் நான்காண்டு காலப் பகுதியில், இப்பிரதேசத்தில் மொத்தம் 2517 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு, 12, 585 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இவ்வாறு குடியமர்த்தப்பட்ட 2517 குடும்பங்களில் ஏறத்தாழ 1460 குடும்பங்கள் சிங்கள மாவட்டங்களான அநுராதபுரம், கண்டி, நுவரெலியா, கொழும்பு ஆகியவற்றிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு குடியமர்த்தப்பட்டவர்களாவர். இவ்வாறு பெருமளவு சிங்களவர் குடியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு, இப்பிரதேசத்தில் ஒரு பௌத்த விகாரை அமைப்பதற்கு அரசாங்கத்தினால் நிலம் ஒதுக்கப்பட்டது.


கந்தளாய்க் குடியேற்றத் திட்டம் அமைந்துள்ள தம்பலகாமம் காரியாதிகாரி பிரிவின் சனத்தொகையினையும் அதன் வளர்ச்சியையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | சனத்தொகை | வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1871 | 3456 | - |
| 1881 | 4190 | 22. 2 |
| 1891 | 4629 | 10. 5 |
| 1901 | 6520 | 40. 8 |
| 1911 | 7391 | 13. 3 |
| 1921 | 9332 | 26. 3 |
| 1931 | 10936 | 17. 1 |
| 1946 | 16374 | 49. 8 |
| 1953 | 22742 | 38. 9 |
| 1963 | 45568 | 100. 4 |
| 1971 | 65740 | 44. 3 |
| 1981 | 89525 | 36. 2 |

இந்த அட்டவணையின்படி, தம்பலகாமம்பற்று பிரதேசத்தில் உயர்ந்த சனத்தொகை வளர்ச்சிவீதம் 1953 – 1963 காலப்பகுதியில் காணப்படுவதனை அவதானிக்கலாம். இக்காலப் பகுதியில் இப்பிரதேசத்தின் சனத்தொகை 100 சதவீதத்தினால், அதாவது இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. கந்தளாய் குடியேற்றத் திட்டத்தின்மூலம் பெருமளவு சிங்களவர்கள் இப்பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டதன் விளைவே இதுவாகும். இதனைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு தம்பலகாமம்பற்று காரியாதிகாரிப் பிரிவு கந்தளாய், கிண்ணியா என்று இரண்டு காரியாதிகாரி பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதன்படி, 811 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினை உடைய தம்பலகாமம்பற்று காரியாதிகாரிப் பிரிவிலிருந்து, 337 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு, கந்தளாய் என்ற புதிய காரியாதிகாரி பிரிவிற்குள் சேர்க்கப்பட்டது தம்பலகாமம்பற்று என்ற காரியாதிகாரி பிரிவில் ஒரேயொரு கிராமசேவகர் பிரிவாக மட்டுமேயிருந்த கந்தளாய், 1966 இல் 23 கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட ஒரு காரியாதிகாரிப் பிரிவாக மாற்றப்பட்டது.

**சி. வரதராஜன்**

1901 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது, கந்தளாய் பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 156 பேராகும். இவர்களில் 79 பேர் தமிழர்களாகவும் 55 பேர் முஸ்லிம்களாகவும் 16 பேர் சிங்களவர்களாகவும் இருந்தனர். இந்தப் 16 சிங்களவர்களும் இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் அல்லர். ஏனெனில் 1921 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் போது, கந்தளாய்ப் பிரதேசத்தில் ஒரேயொரு சிங்களவர் மட்டுமே இருந்தார். இவரும் ஒரு ஆண் ஆகும். எனவே தொழிலுக்காக தற்காலிகமாக இப் பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்தவர்களே இச் சிங்களவர்களாவர். 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி, கந்தளாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மொத்த சனத்தொகையான 37,600 பேரில் 31,206 பேர் சிங்களவர்களாகவும், 4328 பேர் முஸ்லிம்களாகவும், 2001 பேர் தமிழர்களாகவும் உள்ளனர். எனவே 1901 – 1981 காலப்பகுதியில், கந்தளாய்ப் பிரதேசத்தில் தமிழர் தொகை 4619 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க, சிங்களவர் தொகையோ 194, 938 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது (இவ்வாறான உயர்ந்த சதவீதத்தினை வாசகர்கள் வாசிப்பது இதுதான் முதற்தடவையாக இருக்கும் எனநம்புகிறேன்). இதன் விளைவாக 1901 இல் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமாக மட்டுமே இருந்த (குறிப்பு : 1921 இல் ஒரேயொரு சிங்களவர் மட்டுமே இருந்தது நினைவுகூரத் தக்கது) சிங்களவரின் பங்கு, 1981 இல் 83 சதவீதமாக அதிகரித்தது. மாறாக 1901 இல் 86 சதவீதமாக இருந்த தமிழ் மக்களின் பங்கு 1981 இல், 17 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இப்பிரதேசத்தின் தமிழர், சிங்களவர் தொகைகளை மட்டுமே கருத்திற்கொண்டு நோக்கும் போது, 1901 இல் இப்பிரதேசத்தில் ஒவ்வொரு 100 பேரிலும் ஏறத்தாழ 85 பேர் தமிழர்களாகவும் 15 பேர் சிங்களவர்களாகவும் (இவர்களும் தற்காலிகமாக தொழிலுக்காக இப்பிரதேசத்தில் குடியேறியிருந்தவர்களாவர்) காணப்பட்டனர். ஆனால் 1981 இல் இப்பிரதேசத்தில், ஒவ்வொரு 100 பேரிலும் ஏறத்தாழ 95 பேர் சிங்களவர்களாகவும் 5 பேர் மட்டுமே தமிழர்களாகவும் இருந்தனர். 1901 – 1981 காலப்பகுதியில் கந்தளாய்ப் பிரதேசத்தில் ஏற்பட்ட இனவிகிதாசாரத்தின் மாற்றத்தினை வேறொருவிதமாகக் கூறுவதாயின், 1901 இல் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 20 சிங்களவர் மட்டுமே இருந்தனர். ஆனால் 1981 இல், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 1560 சிங்களவர் இருந்தனர். இதனடிப்படையில் கந்தளாய்க் குடியேற்றத் திட்டத்தின் சாதனை, திருகோணமலை மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியினை சிங்களமயமாக்கியதே ஆகும்!



# நீக்கியும் நீங்காத தடைச்சட்டங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பாதை திறக்கும் விவகாரம் இழுபறியில் உள்ளது. பூநகரியில் நிலை கொண்டுள்ள படையினரை அப்புறப்படுத்தி, அங்குள்ள படைத்தளத்தை அகற்றி, சுதந்திரமான ஒரு பாதையைத் திறந்துவிடுவதற்கு அரசு மறுத்துவிட்டது. அதனால், சமரச முயற்சிகள் சிக்கலான கட்டத்திற்குள் இறுகிப்போயுள்ளன.

எனினும், மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களின் முடிவில், தடைகள் சிலவற்றைத் தளர்த்துவது குறித்த சில முடிவுகள் எட்டப்பட்டன. ஆனாலும், உருப்படியான முறையில் செயற்படுத்தக்கூடிய முன்னேற்றகரமான தீர்மானங்களாக அவை அமையவில்லை; அல்லது ஆக்கபூர்வமான வகையில் அவை நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இரண்டாம் மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டதற்கமைய, நான்காண்டுகளாக நாட்டை ரணகளமாய் மாற்றிக்கொண்டிருந்த போர் நிறுத்தப்பட்டதுடன், மீன்பிடித்தொழிலுக்குத் தடைக்கல்லாக இருந்த கடலடங்கு சட்டத்தை நீக்கிவிட்டதாகவும், மக்களின் அன்றாட வாழ்வைப் பாதித்த பிரதான காரணியான பொருளாதாரத் தடையை மிகப் பெருமளவில்தளர்த்திவிட்டுள்ளதாகவும், இதனால் வடக்கு - கிழக்கில் நிலவிய நெருக்கடி நிலை தளர்ந்துவிட்டதாகவும் ஒரு தோற்றப்பாட்டைச் சிங்கள அரசு சர்வதேச அரங்கிற்குக் காட்டுகின்றது.


ஆனால், கடலடங்கு சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என்பதற்கு மாறாகவும், 'மோதல் தவிர்ப்பு' இணக்கப்பாட்டின் விதிமுறையை மீறுவதுபோலவும் மீன்பிடிக்குச் சில கட்டுப்பாடுகளை அரசு விதித்துள்ளது.

## கடல்வலயத் தடைச்சட்டம்

கடந்த பத்தாண்டு காலமாக சிறிலங்கா அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடல் வலயத் தடைச்சட்டத்தினால் தமிழீழம் ( வட - கிழக்குப் பிராந்தியம் ) கடற்றொழில் ரீதியாக மட்டும் அடைந்துள்ள பின்னடைவு சாதாரணமானதல்ல. கடற்றொழில்சார் நிபுணர்கள் இந்தப் பின்னடைவையும், ஏற்பட்டுள்ள பாதிப்பையும் புள்ளிவிபர ரீதியான நிருபணங்களுடன் கணிப்பிட்டதிலிருந்து இது தெரியவருகின்றது.

1983 ஆம் ஆண்டு 1,04,518 மெ. தொன் கடலுணவு பெறப்பட்டபோதிலும், அந்த ஆண்டின் கடலுணவு உற்பத்தி இலக்கானது 1, 24, 750 மெ. தொன்னாக இருந்தது. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் பெறப்பட்ட கடலுணவு சராசரியாக ( ஆண்டுக்கு ) 52, 894 மெ. தொன் மட்டுமே தான். எனவே, 1983இன் உற்பத்தி இலக்கையே அதன் பின் வந்த பத்தாண்டுகளுக்கும் வைத்துக் கணிப்பிட்டால் கூட, சராசரியாக (ஆண்டுக்கு) 71, 856 மெ. தொன் கடலுணவு உற்பத்தி இழப்பாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, கடந்த பத்தாண்டு கால கடல்வலயத் தடைச்சட்டத்தினால் ஏற்பட்ட கடலுணவு உற்பத்தி இழப்பாக – மிகமிகக் குறைவான ஒரு விலைப் பெறுமானத்தின்படி – 14, 071. 4 மில்லியன் ரூபா அண்ணளவாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், வட - கிழக்குப் பிராந்தியத்தில் குறைந்தது 58, 582 குடும்பங்கள் கடற்றொழிலை நம்பி வாழ்கின்றன. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த – குறைந்தது – 3, 36,865 பேர் கடற்றொழிலில் ஈடுபடுவோராக உள்ளனர். அதே சமயத்தில் – இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக – இவர்களில் அண்ணளவாக 25, 000 குடும்பத்தினர் இடம்பெயர்ந்துள்ளனர். எனவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால், கடலடங்கு சட்டத்தினாலும் கடற்படையினரின் நடவடிக்கைகளினாலும்மட்டும், குறைந்தது 4 லட்சம் மக்களின் அன்றாட வாழ்வு சீர்குலைந்துள்ளது.




முன்னைய அரசினால் அமுல் செய்யப்பட்ட இந்தக் கடலடங்கு சட்டத்தினால் தமிழ் மக்கள் பட்டுவிட்ட கஷ்டங்களுக்கும், அடைந்துவிட்ட நட்டங்களுக்கும் பரிகாரமாக, புதிய அரசு கடல்வலயத் தடைச்சட்டத்தை நீக்கி நல்ல முறையில் செயற்படும் என்று, தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தனர்.

ஆனால், அவர்களது நம்பிக்கைகளை வீணடித்த சந்திரிகா அரசு, கடலடங்கு சட்டத்தை நீக்குவதுபோலக் காட்டிக்கொண்டு, குறிப்பிட்ட சில கடற் பிரதேசங்களில் – குறிப்பிட்ட சில தூர எல்லைக்குள்– குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே மீன்பிடிக்க முடியும் எனக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இன்னொரு பக்கத்தில், இராணுவ நிலைகளிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பால் எவரும் எப்போதும் நடமாடலாம் என்ற 'மோதல் தவிர்ப்பு' இருதரப்பு இணக்கப்பாட்டின் விதிமுறைகளுக்கு முரணாகவும், இது உள்ளது.

இரவு மீன்பிடி தடுக்கப்பட்டுள்ளது. ஒரு பகலுக்குள் ஆழ்கடலுக்குப் போய் மீன் பிடித்து வருவதென்பது சாத்தியமான காரியமல்ல. கரையோரக் கண்டமேடைக் கடலில் பகலில் பிடிக்கும் கடலுணவைக் கொண்டுவந்து, இரவில் சந்தை நடாத்த முடியாதென்பதும்; அடுத்த பகலில் சந்தைப்படுத்தும்வரை வைத்துப் பாதுகாக்கும் வசதிகள் இங்கு இல்லை என்பதும், சந்திரிகாவுக்கும் ரத்வத்தைக்கும் தெரியாததும் அல்ல.

'சமாதானத்தோடு சகஜவாழ்வையும் தருகிறேன்' என்றவர், அதைச்செய்ய இதய சுத்தியோடு, விரும்புகிறாரென்றால் – கடற் தடைச்சட்டத்தை நீக்கத் தடையேதும் இல்லை !

## பொருளாதாரத் தடை

ஒரு நாட்டினதோ அல்லது ஒருபிரதேசத்தினதோ பொருண்மிய அபிவிருத்தி என்னும் போது – அது துறைசார் வல்லுனர்களினால் திட்டப்படும் மேம்பாட்டுத் திட்டங்களோடும், உற்பத்தி உபகரணங்களோடும் பின்னிப்பிணைந்துள்ள போதிலும் – அனைத்து அபிவிருத்தித் திட்டங்களினதும் உயிர்நாடியாக மின்சக்தியும், எரிசக்தியுமே விளங்குகின்றன.

இது ஒரு மிகச் சாதாரண பொது அறிவு. எல்லாராலுமே விளங்கிக் கொள்ளக்கூடிய இதற்கு, புள்ளிவிபர ரீதியான நிருபணங்கள் எதுவும் தேவையில்லை.

மற்றெல்லாவற்றுக்குமான தடைகளையும் நீக்கம் செய்து, அனைத்துப் பொருட்களும் செல்ல அனுமதி வழங்கிய பின்பும்கூட, எரிபொருளையும் மின்சாரத்தையும் மட்டுமே தடுத்து வைத்திருப்பதன்மூலம், குறிப்பிட்ட அப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியையும் அன்றாட வாழ்வையும் 80% சீர்குலைக்க முடியும்.

பொருளாதாரத் தடையைத் தளர்த்திவிட்டதாக ஒரு 'நல்ல பிள்ளை' முகத்தை வெளி உலகிற்குக் காட்டிக்கொண்டு – எரிபொருளையும் மின்சக்தியையும் தடைசெய்தவண்ணம்– மேற்கூறியதைச் சாதிக்கவே புதிய சிங்கள அரசும் விரும்புகின்றதுபோலத் தெரிகின்றது.


வட பிராந்தியத்திற்கு மின்சாரம் வழங்கக்கூடியதான முன்னேற்பாடுகளைச் செய்து, மின் விநியோகப் பாதைகளைச் செப்பனிடும் பணியைப் பூர்த்தியாக்க, குறைந்தது பத்து மாதங்கள் தேவை என்று அரச தரப்பில் சொல்லுகின்றார்கள். வடக்கு இன்று இருக்கிற நிலையில் அது ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்ற ஒரு காரணம்; பரவாயில்லை. அப்படியாயின் எரிபொருள் … ..?

எரிபொருளுக்கான தடை நீக்கப்பட்டாலே, 'பொருளாதாரத் தடை நீக்கம்' என்பது முழுமையான பயன்பாட்டைத் தரும். ஏனெனில், எந்த ஒரு தொழில் முயற்சியும் இன்று எரிபொருளை மூலாதாரமாகக் கொண்டதாகவே உள்ளது. மின்சார வசதி இல்லாத நிலையில் மின்னாக்கி இயந்திரங்களிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதிலிருந்து, கடற்றொழிலிற்குச் செல்வதற்கு – கைத்தொழிற்சாலைகள் இயங்குவதற்கு – விவசாயம் செய்வதற்கு – சாதாரண போக்குவரத்திற்கு – என்றவாறாக, எல்லாவற்றுக்குமே எரிபொருள் இன்றியமையாத ஒன்றாகவே உள்ளது.

எனவே, நான்காண்டுகளாக அமுலிலிருந்த பொருளாதாரத் தடையைத் தான் தளர்த்தியதாகப் பெருமளவில் பிரச்சாரம் செய்யும் சந்திரிகா அரசு,எரிபொருள் தடையையும் நீக்கினாலேயே அது முழுமையான அர்த்தத்தைப் பெறும் என்பதை, சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும். சந்திரிகா இதனைச்செய்யவில்லையானால், பழைய அரசிற்கும் புதிய அரசிற்கும் வேறுபாடு காணமுடியாமல் போகும். பழைய அரசு பொருளாதாரத் தடையையும் கடலடங்கு தடையையும் பிரகடனப்படுத்தி, வெளிப்படையாக அமுல்செய்தது; புதிய அரசு பிரகடனப் படுத்தாமலேயே, மறைமுகமாக அவற்றை அமுல்செய்கின்றது என்றுதான் பொருள் கொள்ளவேண்டியிருக்கும்! ○

# நரபலி எடுத்தவனும், உயிர்விலை கொடுத்தவனும் தராசுத்தட்டில்... சமனாக முடியாது!

மேகக்கூந்தல் காற்றில் விரிய
வந்திறங்கும் வரமளிக்கும் தாயே!
வருக!
''ஒலிவ்'' கிளைசுமந்த சமாதான தேவதையே!
உலங்கு வானூர்தியில வந்திறங்குகின்றாயே
வணக்கம் வருக.
உன் பூம்பாதங்கள் புண்படலாகாதென்று,
செங்கம்பளம விரித்துவைத்துள்ளோம்.
அச்சமின்றி நடந்துவருக.
முள்ளேதும் குத்திவிடக்கூடுமென்று
நேற்று,
பாதையெங்கும் பஞ்சுகொண்டு ஒத்தியெடுத்தோம்.
மஞ்சள் தெளித்து மலர்தூவி வைத்துள்ளோம்.
பேச்சுவார்த்தைக்கு வந்த பேரழகியே!
புன்னகைத்தபடி வருக.
பார்;
உன் பக்கத்தில்
யார் நிற்கிறார்கள்?
எங்கள் சீருடைச் செல்வங்கள்.
''மூத்திரம் பெய்யத்தெரியாத பையன்கள்''
இவர்களை
தெற்கில் இப்படித்தான் சொல்லுகின்றனர்.
பக்கத்தில் அழைத்துப் பார்த்துக்கொள்.
மீசை முளைக்காத முகங்களைப் பார்.





உற்று நோக்கினால்...—
உன் விழிகளே கூசும்.
நெருப்பைச் சுமக்கும் நிலவுகள் இவர்கள்.
பூநகரிக்குள்ளே புகுந்த
புயல்கள் இவர்கள்தான்.
மண்கிண்டிமலை இவர்களிடம்தான் மண்டியிட்டது.
சிங்கத்தின் பிடரிமயிரைப் பிடித்து
உலுப்பிய சிறுவர்கள்.
எதிரி இறங்கினால் எரிந்துபோகக்கூடிய
மணலாற்றில் பாயும்
அனலாறு இவர்கள்தான்.
அனிச்சம் பூவிலும் மென்மையான முகங்களை
கொலைவெறியரென்று ஏன் குறிப்பிடுகின்றனர்?
இந்தப் பூக்களா யுத்தப் பிரியர்கள்?
காலத்தின் சுமையை தோள்களிற் சுமக்கும்
''இந்திர சித்துக்கள்''தானே இவர்கள்.
மேசையில் அமர்ந்து பேசலாம் தாயே!
வலதுகாலை எடுத்துவைத்துப் படியேறி,
நேரே நிமிர்ந்து பார்.
சுவரில் தெரிவது யார்?
புலித்தலைவன் பிரபாகரன்.
உறறுப்பார்
முகத்தில் உலகமே தெரியும்.
இந்த முகத்தையா கெந்தகம் என்றார்கள்?
இனிப் பேசத்தொடங்கலாம் பெருமாட்டி.
பூநகரிப் பாதை திறப்பு
பெற்றோல் மீதான தடையை நிறுத்து.
'செஸ்' விளையாடத் தெரியுமா சீமாட்டி?
ஆயின் காயை நகர்த்து.
தவளை பாய்ந்த தங்ககத்தை கேட்பதினால்——
நிலைமை மோசமென்று நினையாதே.
புலிகளின் பலம்தான் பேசுகிறது.
பலவீனம் மேசைக்கு வரவில்லை.
பேச்சுவார்த்தை தோற்றுப்போனால்——
தோற்ற இடத்திலிருந்து தொடருமெம் போராட்டம்.
பேச்சுவார்த்தைகூடப் போராட்டம்தானே!
தூதுக்குவந்த தேவதையே!
ஏது; பேசமறந்து இருக்கின்றாய்.
வாயைத்திறந்து வார்த்தைகளை வரவிடு.
அடிமனதின் ஆழத்தைக் காட்டு.
பொய்யாகக் கைகுலுக்குவதிலும் பார்க்க

## உலைக்களம்

வியாசன்

போர்க்களத்தில் சந்திப்பதே பெருமை தரும்.
குருவிகள் கொத்துப்பட நேர்ந்தால்
குறிப்பெடுத்துக் கொள்ளுதற்கு
வெளிநாட்டிலிருந்து
வெள்ளைக் கழுகுகள் வந்திருக்கின்றன.
நல்லது தாயே!
பக்கத்து வீட்டுப் பாம்பிலும் பார்க்க
பசுபிக் சமுத்திரத்து ''திமிங்கிலங்கள்''
பரவாயில்லை.
சரி; பூநகரி பற்றியே பேசுவோம்.
குரங்குவால் போல——
குடாக்கடலில் நீளும் பாதையிலும்
இறங்கு துறையிலும் இராணுவம் நிற்கிறது.
கயிற்றால் முறுக்கி
கழுத்தைத் திருகிக் கொண்டு
உயிரைப்பற்றி எப்படிப் பேசலாம்?
விடுதலையின் கரங்களில்
விலங்கைப் பூட்டிவிட்டு
சிறையுடைப்பிற்கு எப்படித் தேதிகுறிக்கலாம்?
பூநகரி வெறும் பொட்டல் வெளியல்ல.
தமிழர் தாயகத்தின் சான்றுகள் புதைந்துள்ள
பழைய தலைவாசல்.
ஆழத் தோண்டினால் அரண்மனை தெரியும்.
வாழ்ந்து முடித்த வரலாறு தெரியும்.
நந்தி பதித்த நாணயம் கிட்டும்.
சொந்தம் எமதென்ற 'தோம்பு' கிடைக்கும்.
கொடியுடன் ஆண்ட கொற்றவையின்
அத்திவாரத்தில் ''அவர்கள்'' மலம் கழிக்க
எப்படித்தாயே! இணக்கம் காணலாம?
முப்பதுவருட முகமுறிவையும்,
நூலிழைகூட இறறுப்போன உறவையும்,
நினைத்தவுடன் நெளிவுதட்டி
நிமிர்த்த முடியுமா?
விட்டுக்கொடுப்பும்
விரிந்த மனப்பான்மையும்
தட்டுப்பாடான ''பேரினவாத''ச் சந்தையில்
எப்படி ''இணக்கத்தை'' இலகுவில் வாங்கலாம்?
நரபலி எடுத்தவனும்,
உயிர் விலைகொடுத்தவனும்,
தராசுத்தட்டில் சமனாக முடியாது.
நீதிக்கான போருக்கும்,
நியாயத்துக்கான பேச்சுக்கும்,
தர்மமே தலைமை தாங்க வேண்டும்.
பூநகரி ஒரு குறியீடு.
பூநகரி ஒரு சோதனைக் களம்.
எலதயெதை ''அவர்கள்'' எமக்குத் தருவாாகள்
என்பதை அறியும் அளவுக் கருவி.
பேச்சுக்குவந்த பெருமாட்டி!
போய்ச்சொல்லு.
நல்ல சமிக்ஞையாய்
நமபிக்கை ஒளிகாட்டி,
பூநகரிப் பாதையின் பூட்டுக்களைத் திறந்து,
பெற்றோல் வண்டியை முதலில் விடச்சொல்லு.
அதன்பிறகே,
நடப்பன யாவும் நல்லன ஆகும்.
நன்றி.
சென்றுவருக. ○

# புலிவீரர்களின் நெஞ்சுறுதி எங்கிருந்து வருகின்றது?




இழப்புகள் இலட்சிய உறுதியை ஆட்டங்காணச் செய்யும் என்பதும், சோகங்கள் விரக்தியின் விளிம்பிற்கு இழுத்துச் செல்லும் என்பதும் பொதுவான மனித சுபாவம்.

ஆனால், புலிகள் இயக்கத்தின் போராட்ட வரலாற்றை ஆய்வுசெய்யும் ஒருவர், பெரும் இழப்புகளும் தீராத சோகங்களும் போராட்டத்தின் வீழ்ச்சிக்கு வித்திடுவதற்குப் பதிலாக, வெற்றிக்கும் எழுச்சிக்கும் வழிகோலியுள்ள அதிசயத்தைக் கண்டுகொள்வார்.

இராணுவ ரீதியாக பின்னடைவுகளையும் பேரிழப்புக்களையும் பெரும் நெருக்கடிகளையும் புலிகள் இயக்கம் சந்தித்த நிகழ்ச்சிகள், எமது போராட்ட வரலாற்றில் நிறைய உண்டு. ஆயினும், அவற்றைத் தோல்வியின் வரலாறாக வளர விடாமல், வெறும் சம்பவங்களாகவே இருக்கவைத்து, அதன்மீது வெற்றியின் படிக்கட்டுகளை அமைத்த பெருமை தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும்.

அடுத்தடுத்து நடந்த ஆனையிறவுச் சமரிலும் மணலாற்றுச் சமரிலும், சுமார் 900 போராளிகளை இழந்து புலிகள் இயக்கம் பாரிய நெருக்கடியைச் சந்தித்த போது, எதிரியின் கூடாரத்தில் விருந்துகள் நடந்தன. புலிகள் இயக்கத்திற்கும் தலைவர் பிரபாகரனுக்கும் குடாநாட்டுக் குள்ளேயே இறுதிப் புதைகுழியை அமைக்க,



ங்களப் படைத்தலைமை கனவுகண்டது. டாநாட்டைச் சூழ முற்றுகை வலை ரித்து, புலிப்படையின் நாடி – நாளங் ளைத் துண்டித்து, அதன் வரலாற்றுச் ாவைப் பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிங்களப் படைத்தலைமை, ாழ். நீரேரிக்குள்ளிருந்து எழுந்த 'கடற் லிகள் என்ற திமிங்கிலத்தைத்தான்' இறு யில் கண்டுகொண்டது. அந்தக் கடற் மிங்கிலத்தின் எழுச்சி, குடாநாட்டைக் ட்டிவைத்திருந்த இராணுவச் சங்கிலிகளை அறுத்தெறிந்ததுடன், பூநகரிப் படை முகாமுக்கும் சமாதிகட்டி – சிங்கள தேசத்தில் ஆயிரம் புதைகுழிகளையும் அமைக்கச் செய்துவிட்டது.

தமிழர் நிலத்தில் விதைக்கப்படவிருந்த ஒரு வரலாற்றுத் துயரை, இடைவிடா முயற்சி என்ற துடுப்புக்கொண்டு திசை மாற்றி, சிங்களவர் தேசத்திற்கே அனுப்பி வைத்த அற்புதத்தைத் தலைவர் அவர்கள் நிகழ்த்திக்காட்டினார்.

புலிப்படையின் வீழ்ச்சிபற்றி புத்தகங்கள் எழுதக் காத்திருந்தவர்கள், இறுதியில் சிங்களப் படையின் தோல்வி பற்றியே தொடர் கட்டுரைகளை எழுத வேண்டியதாயிற்று.

• • •

எமது போராட்ட விருட்சத்தை ஆணிவேருடன் பிடுங்கி எறிய, இந்திய அரசு ஒரு போரையே தொடுத்தது; விழுதுகளை வெட்டி வீழ்த்தி ஆலமரத்தை அடியோடு பெயர்க்கும் தந்திரத்தை அது கடைப்பிடித்தது.

தலைவர் என்ற ஆலமரம் தளபதிகள் என்ற விழுதெறிந்து விரிந்து பரந்து, தமிழீழத் தேசியத்திற்குக் கூரையாக இருந்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

எமது தளபதிகளை நயவஞ்சகமாகக் கொன்று – போராட்டத்தின் விழுதுகளை வெட்டி வீழ்த்தி – ஆலமரத்தை அடியோடு சாய்க்கக் கனவுகண்ட இந்திய அரசு, இறுதியில், பலநூறு புதிய விழுதுகளுடன் ஆலமரம் மேலும் பலம்பெற்று உறுதியுடன் நிற்பதைத்தான் கண்டது.

விழுதுகளை வெட்டினால் ஆலமரம் நிலைகுலையும் என்ற பொதுவிதிக்கு, புலிகள் இயக்கம் விதிவிலக்காக இருந்தது

"தளபதிகள் புலேந்திரன் – குமரப்பா ஆகியோரின் அநியாயச் சாவால் எழுந்த வேகமும் அது தந்த மனவுணர்வும்தான், இந்தியப் படையுடன் போராடும் மனவலுவை எனக்குத் தந்தது'' என்று, தலைவர் அடிக்கடி கூறுவார்.

தளபதிகளின் இழப்புகளும் போராளிகளின் வீரச்சாவுகளும் தலைவரின் இதயத்தில் சோக விதைகளாக வீழ்வது என்பது உண்மைதான். ஆனால், அவை தலைவரின் இலட்சிய உறுதியை அசைத்துப் பார்ப்பதில்லை; அந்த இழப்புகளால் வரும் ஓர்மம் அவரை இலட்சியப் பாதையில் வீறுடன் செல்லவைத்திருக்கின்றது.

இழப்புகளையும் சோகங்களையும் கண்டு பின்வாங்குவதற்குப் பதிலாக, மேலும் மனவுறுதி பெற்று நெருப்பாறுகளைக் கடக்க முயல்வது, தலைவர் வகுத்து வைத்திருக்கும் ஒரு மரபு.

இந்த வீர மரபுடன் கூடப்பிறந்துள்ள உயிராபத்தைக் கண்டு முயற்சியை நிறுத்தவோ, இலட்சியப் பயணத்தைக் கைவிடவோ தலைவர் என்றும் தயாராக இருந்ததில்லை. எமது போராட்ட வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியிலும் போராட்டத்தின் பாய்ச்சலிலும் இந்த மரபு தனது முத்திரையை ஆழமாகப் பதித்திருப்பதைக் காணலாம்.

எந்தெந்தக் காலத்தில் புலிகள் இயக்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றதோ, எவ்வெப்போதெல்லாம் அது தாங்கமுடியாத சோகங்களை எதிர்கொள்கின்றதுவோ, அப்போதெல்லாம் தலைவர் பிரபாகரன் அவர்கள் அபாரமாகச் செயற்பட்டு, சாதனைகளையும் வீரவரலாறையுமே உருவாக்கிவிட்டிருக்கின்றார்.

நீண்டபல ஆண்டுகளாகத் தலைவருக்கு உற்ற நண்பனாகவும் தோள்கொடுக்கும் தளபதியாகவும் இருந்து செயற்பட்ட கிட்டண்ணா, வங்கக்கடலில் இந்தியச்சதிக்குப் பலியாகிவிட்டார் என்ற செய்தி தலைவரின் காதுகளை வந்தடைந்தது.

"எனக்கு அப்போது அழவேண்டும் போல் இருந்தது; ஆனால் நான் அழ மாட்டேன். தமிழர் அழுது கண்ணீர்விட்டுக் கவலையை ஆற்றியகாலம் போய்விட்டது; இது தமிழனை அழவைத்தவனை அழவைக்கும் காலம்'' – கிட்டண்ணையின் வீரச்சாவு கொடுத்த உள்ளுணர்வு பற்றி இப்படித்தான் தலைவர் நினைவுகூர்ந்திருந்தார்.

• • •

இழப்புகளை உள உறுதியின் மேம்பாட்டிற்காகவும், நெருக்கடிகளைச் சாதனைகளின் தொழிற்சாலையாகவும், சோகங்களை வீரச் செயற்பாடாகவும் மாற்ற முயற்சிக்கும் இந்தப் புதிய மரபு, தலைவர் அவர்களிடம் அண்மையில் ஏற்பட்ட ஒன்றல்ல; அது போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே – இயக்கம் முதற் போராளியை இழந்த அந்த நாளிலிருந்தே – தலைவரை ஆட்கொண்டிருக்கின்றது.

முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த செய்தியைக் கேள்வியுற்ற அந்தக் கணப்பொழுதிலேற்பட்ட தனது உள்ளத்து உணர்வுகளைத் தலைவர் அவர்கள் எழுத்தில் வடித்திருக்கிறார்.

''...சத்தியநாதனே ! நீ வீரமரணமடைந்ததையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய் ? இல்லை இல்லை...... ஒரு வீரனின் மரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம்; தொடர்வோம் உன் பாதையில்,

அடைவோம் உன்னைப் போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை.''

எமது இயக்கத்தின் முதல் மாவீரன் வீரச்சாவடைந்த போது தலைவர் எடுத்துக் கொண்ட அதே உறுதிமொழியைத்தான் இன்று, 6897 ஆவது மாவீரன் நிலத்தில் சாயும்போதும் உச்சரிக்கின்றார்.

* * *

ஒரு போரில் பின்னடைவுகளும் பேரிழப்புகளும், சம்பந்தப்பட்ட இராணுவத்தைத் தோல்விச் சகதிகளுள் தள்ளிவிடும்.

படையியலில் இது ஒரு அரிச்சுவடி.

பேரிழப்புகளும் பெரும்நெருக்கடிகளும் ஒரு மனிதனது உள உறுதியைச் சிதைத்துவிடும்.

மானிடனின் வாழ்வில் இது ஒரு பொது நியதி.

ஆனால், இவை இரண்டும் தலைவர் பிரபாகரனிடம் சென்றதும் விதிவிலக்காக மாறிவிடுகின்றனவே !

தலைவரிடமிருந்து வரும் இந்தப் புதிய வீர மரபைப் புலிவீரர்கள் உள்வாங்கி, தமிழீழத் தேசியத்தின் பரம்பரைச் சொத்தாக மாற்றிக்கொண்டிருக்கின்றார்கள் !

## போராட்டத்தின் முதல் இழப்பும்; தலைவரின் உணர்வலையும்!


**எமது முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த உடனே, தலைவர் அவர்கள் தம் கைப்பட தனது உணர்வுகளை எழுதியிருந்தார்; அதைக் கீழே தருகிறோம்.**

சத்தியநாதன் ( சங்கர் )

**மறைவு : 27. 11. 82**

**இரவு 6. 05 மணி**

*அதர்மத்தை அழிக்க எழுந்த மகாபாரத தர்மப் போரிலே தர்மத்தைக் காக்க முதல் களப் பலியாகிய அரவானைப் போல், சிங்கள அதர்மர்களிடத்தில் தர்மயுத்தம் நடாத்தி எமது தமிழீழ நாட்டை மீட்கப்போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் களப்பலியாகிய சத்தியநாதனே ! நீ உனது பெயருக்கேற்ப சத்தியத்திற்காகப் போராடி வீரமரணம் அடைந்துவிட்டாய். இதையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய். இல்லை, இல்லை. ஒரு வீரனின் வீரமரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம். தொடர்வோம் உன்பாதையில்; அடைவோம் உன்னைப்போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை.*



## பகைவனுக்கு சனியனாகவே இரு!

*''உனது பெயர் சனியனா? ''*

*- காகம் இவ்வாறு கிளியைக் கேட்டது!*

*''ஏன்?''*

*''அப்படித்தான் அந்த 'கொழும்பு அக்கா' உனக்குப் பெயர் வைத்துள்ளா''*

*இது அந்தக் கிளி முன்னர் அடைபட்டுக்கிடந்த வீட்டின் கதை!*

*இப்போது அதே கிளி அந்த வீட்டில் தொங்கிய கூண்டுக்குள் அல்ல -*

*பரந்து வளர்ந்திருந்த ஓர் ஆலமரத்தின் உச்சிக்கிளையிலே இருந்தும் வட்டமிட்டுப் பறந்தும் கனிகளைக் கோதிக் கொறித்தும் தனது சுதந்திர வானிலே மிதந்துகொண்டிருந்தது!*

*காகம் அந்த வீட்டையும் எட்டிப் பார்க்கும்; ஆனால் வெளியில் வாழ்ந்துகொள்ளும்!*

*கிளிக்கும் இதற்கும் அப்போது ஏற்பட்டது தான் இந்த உறவு!*

*''அவ என்னைச் சனியன் என்கிறாவா? நல்லது! பகைவர்களுக்கு நாம் பகைவர்களாக இருப்பதே நல்லது! ''*

*இவ்விதம் கூறியபடி மேலெழுந்து தென்னையில் இருந்து, வயல் வெளிகளையெல்லாம் கடந்து, கிளி விரைந்து செல்வது தெரிந்தது! தனித்து அல்ல, தனது கிளையோடு சேர்ந்து! 'கீக் - கீ' என்ற இசையோடும் சேர்ந்து! எத்துணை இன்பம், இந்தச் சுதந்திர வாழ்வில்!*

*ஆனால், அந்த வீட்டிலே கூண்டினுள் அடைபட்டுக் கிடந்தபோது -*

*அன்று ஒரு நாள் -*

*'கொழும்பு அக்கா' ஊருக்கு வருகிறா என்றதும் அந்த வீடு கும்மாளம் கொண்டது! குழந்தைகள் குதித்துக் கூத்தாடினர்!*

*அக்காவும் நல்லவதான். சிரித்த முகத்தோடு நிறையப் பொருள் கொண்டுவந்து குழந்தைகளுக்கும் எல்லாருக்கும் தாராளமாய் வழங்கினா!*

*கூண்டுக்கிளிக்கு?*

*அதையும் பரிவோடு பார்த்தாள். ''பாவம்'' என்றாள்!*

*கிளியின் நெஞ்சம் ஆவலால் அடித்தது!*

*மறுநாளும் அக்கா ''கிளி பாவம்'' என்றாள்!*

*தான் விடுபடப்போகும் நாளை கிளி உறுதிப்படுத்திக்கொண்டது! ஒரே '' கீச் கீச்'' தான்!*

*மூன்றாம் நாள், அக்காவின் பரிவு மேலும் வளர்வது தெரிந்தது.*

*நான்காம் நாள், ஒரு வேலையாள் வந்தான்; அக்காவின் கட்டளைப்படி வந்தான்.*

*கையிலே ஒரு வளையம் வைத்திருந்தான். அது, கிளி கூண்டிலே இருந்து ஊஞ்சலாடவாம்! மறு கையில் ஒரு தீந்தைத் தகரம், கூண்டுக்குப் பச்சைநிறப் புதுப்பொலிவு கொடுக்க!*

*கிளி ஏங்கி நின்றது. முகம் கறுக்க நின்றது!*

*வந்தவன் கூண்டின் கதவை மெதுவாகத் திறந்து, கிளியை ஒரு மரணப்பிடியோடு வெளியே எடுத்தான்.*

*- இங்குதான் இயற்கையின் நுட்பம் விளங்குகிறது! ஒவ்வொரு உயிருக்கும் அது அஞ்சாமை, வீரம், ஆயிரம் மடங்கு பலம் என்பதைப் புகுத்தியே நிற்கிறது; இவை மட்டுமல்ல, ஆயுதமும் தான்!*

*கிளி சிறகடித்துப் பார்த்தது, முடியவில்லை! எங்கிருந்துதான் அந்த ஆவேசம் பிறந்ததோ தெரியாது - தலையை ஓங்கி நிமிர்த்தி அவனின் கையிலே ஒருகொத்து! கொத்தல்ல, ஒரு கிழியல்! நுனிவிரல் பிழந்து குருதி கொட்டிற்று!*

*''ஐயோ!''என்று அலறிக் கைவிட்டான் அவன்!*

*உதவிக்கு ஓடிவந்த அக்காவுக்கும் ஒரு கீறல்!*

*அத்துடன் பறந்தடித்துக்கொண்டு உயர்ந்து விட்டது கிளி!*

*கொழும்பு அக்காவின் 'சனியன்' பட்டத்தை அது ஏற்று மகிழ்கிறது!*

*'எதிரியின் சலுகைக்கு உள்ளாகி உன்னை நீ அடிமையாக்காதே!'' - இது காகம் காட்டிவாழும் தத்துவம்.*

*'எதிரிக்கு எதிரியாய் எழுந்தாலே வெற்றி!' - இது, கிளி செய்து காட்டிய சாதனை!*

**- நாக. பத்மநாதன்**

## *பண்டா செல்வா...*

*( 7ஆம் பக்கத் தொடர்ச்சி )*

செல்வா உடன்பாட்டை நடைமுறைப்படுத்தியிருந்தாற்கூட இவ்வளவிற்குச்சிங்களக் குடியேற்றம் நிகழ்ந்திருக்க முடியாது அதாவது, 1957 ஆம் ஆண்டின் பின்பு குடியேறிய சிங்களக் குடியேறிகளின் தொகை மிகப் பெரியது. ''சுதந்திரமடைந்த'' 1948 ஆம் ஆண்டின் பின்பு- மேலும் பண்டா- செல்வா உடன்பாட்டை நடைமுறைப் படுத்தாது கைவிட்ட காலத்தின் பின்பு - சிங்களக் குடியேற்றத்தினால் அபகரித்துக்கொண்ட தமிழ் மண்ணைச் சிங்களப் பகுதிகளுடன் இணைப்பதென்பது, எத்துணை விசித்திரமான எண்ணம் என்பது புலனாகும்!

1947 ஆம் ஆண்டின் பின்பு அஸ்ஸாமிற் குடியேறிய அஸ்ஸாமியரல்லாதோரை வெளியேற்ற வேண்டுமெனக் கோரி, 1980 களின் முற்பகுதியில திருமதி இந்திராகாந்தி அரசாங்கத்துடன் அஸ்ஸாமியர் போராடியதையும், பின்பு அக்கோரிக்கை கணிசமான அளவு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓரளவு தீர்வு காணப்பட்டதையும், இங்கு நினைவுபடுத்தலாம். அதாவது, குடியேற்ற அகற்றல் என்னும் கோரிக்கைகள் வரலாற்றில் நடைமுறைக்கு வந்துள்ளன என்பதே இங்கு உண்மை.

அத்துடன் 1957 ஆம் ஆண்டு நிலைமை 1995 ஆம் ஆண்டில் இல்லை. 1956ஆம் ஆண்டு, தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்து, சிங்களவரான கலாநிதி கொல்வின் ஆர். டி.சில்வா, பண்டாரநாயக்காவைப் பார்த்துக் கூறியவற்றை இங்கு அவர்களுக்குத் திருப்பிக் கூறலாம். அதாவது -

''தமிழர்களைப் பிழையாக நடாத்தினால், அவர்களைப் புண்படுத்தினால், அவர்களைத் தவறாகக் கையாண்டால், அவர்களை ஒடுக்கித் துன்புறுத்தினால், தனித்துவமான மரபுகளையும் சொந்த மொழியையும் கொண்டிருக்கும் அந்த வளம்பொருந்திய தமிழினம், ஒரு புதிய தேசிய இனம் என்ற நிலையில் எழுச்சிபெற நீ காரண கர்த்தாவாக அமைவதுடன், இன்று நாம் வழங்க ஒப்புக்கொள்வதை விடவும் கூடுதலான உரிமைகளை எதிர்காலத்தில் வழங்கவேண்டிவரும். கஞ்சத்தனமாக நீண்ட காலதாமதம் செய்வதை விடவும் , இப்போதே தாராளமாக கொடுக்க வேண்டியதைக் கொடுப்பதுதான் புத்திசாதுரியம் மிக்க தேசத் தலைவனின் பணி.''

கொல்வின் கூறிய 1956 ஆம் ஆண்டின் பின்பு, 1957 ஆம் ஆண்டு, ஒரு சிறு இடைக்கால உடன்பாடாய், பண்டாரநாயக்கா செல்வநாயகத்துடன் கைச்சாத்திட்டார் ஆனால், அதனைக்கூட நிறைவேற்றாத நிலையில் அது கைவிடப்பட்டு இன்று 37 ஆண்டுகள் கழிந்த பின்பும், இத்துணை பெரும் உயிர்த்தியாகத்தைத் தமிழ்ச் சமூகம் செய்த பின்பும், அதன் பொருளாதாரமும் வளமும் சீரழிக்கப்பட்ட பின்பும், சொல்லில் வர்ணிக்க முடியாத பேரிழப்புகளின் பின்பும், அன்று 'ஓர் இடைக்கால ஏற்பாடு மட்டுமே' எனச் செல்வநாயகம் கூறியதைப் பண்டாரநாயக்கா ஏற்று ஒப்பமிட்ட அந்த உடன்பாட்டின் அடிப்படையில் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படுவது, கால முரண் மட்டுமன்றி விசித்திரமுங்கூட !

# சந்திரிகா அம்மையார் புரிந்துகொள்வாராக!

சந்திரிகா அம்மையாரைப் பொறுத்தவரையில், அவருக்கு இரண்டு பெரிய பதவிகள் உள்ளன. முதலாவது, நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி; அடுத்தது, ஆயுதப் படைகளினது பிரதம தளபதி.

முற்றுமுழுதாகவே அனைத்து மக்களினதும் அகில இலங்கையினதும் நலனை மேம்படுத்தும் பொருட்டு, இவ்விரு அதிகாரங்களையும் தேவையான அளவுகளில் பிரயோகிக்க வேண்டியதே அவரது கடமை.

* * *

''இது ஒரேநாடு. எந்த மதத்தை, எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் அவர்கள் இந்த ஒரு நாட்டின் குடிமக்களே. ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே இங்கு எழும் சமூக, தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடப்படல் வேண்டும். இங்கு மக்கள் சமூகங்களுக்கிடையில் சமரசமும் சகோதரத்துவமும் நிலவவேண்டியதுடன், அவர்களைப் பராமரிப்பதில் சமநிலையும் சார்பின்மையும் பேணப்படல் வேண்டும்.''- இவ்வாறான ஒரு கருத்துப் பரப்புரையோடு ஆட்சிக்கு வந்த சந்திரிகா அவர்களின் அரசினது கொள்கைப் பிரகடனமும் இதுதான்.

* * *

ஆனால், தனது அதிகாரத்தையும் தனது கொள்கையையும் இதுவரை அவர் நியாயத்தன்மையோடு கடைப்பிடிக்கவேயில்லை. அதாவது –

தமிழர்களையும் சிங்களவர்களையும் அவர் சமனாகக் கருதவில்லை; ஒரேவகையாகப் பராமரிக்கவில்லை. ஆகவே, அவர் ஒரே கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என அது அர்த்தப்படலாம்; அப்படியானால், ஒற்றையாட்சிக்குள் தீர்வு எப்படிச் சாத்தியம் என்ற கேள்வியும் எழலாம்.

இன்னும் சற்று விரிவாகச் சொல்வதானால் – தன்னிடமிருக்கும் இரு அதிகாரங்களையும் அவர் இருவேறு நோக்கங்களோடு, இருவேறு இலக்குகள்மீது பிரயோகிக்கின்றார்.

சிங்கள மக்கள் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கும்போது, மக்களின் ஜனாதிபதியாகிச் சாதகமாகச் சிந்திப்பவர் – தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும்போது, படைகளின் தளபதியாகி பாதகமாக முடிவுகள் எடுக்கின்றார். இந்தப் பாரபட்சம் இனவாதத்துடன் சம்பந்தப்பட்டதாக இல்லையா ……?

விடுதலைப் புலிகள் தங்களது நிலைப்பாட்டைத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்து விளக்கியுள்ளார்கள்; அதனைப் புலிகளின் தனிப்பட்ட கோரிக்கையாக நோக்கும் போதுதான், தவறு நிகழ்கின்றது.

ஐந்தாண்டுகளாக யுத்தத்தின் கோரப் பற்களுக்கிடையில் சிக்குண்டு, அன்றாட சீவியத்தின் மீது திணிக்கப்பட்ட அக்கிரமங்களால் வதங்கி, அவலப்பட்டு நிற்கும் மக்களுக்கு முதலில் ஆறுதலளிக்க வேண்டும். அவர்கள் மனப்பீதியற்றும், நிம்மதியாகவும் தங்களது சாதாரண இயல்பு வாழ்வை நகர்த்திச் செல்லும் ஒரு சூழலை ஏற்படுத்திய பின்னர் –

மிகவும் சிக்கலானதும், நிதானமாக அலசி ஆராய வேண்டியதும், சிங்களப் பேரினவாதத்தின் பழைய தலைமைகள் தமிழர்கள் மீது நிகழ்த்திய 'அரசியல் திருவிளையாடல்'களுக்குப் பரிகாரம் காணுவது பற்றியதுமான – அடிப்படை அரசியற் பிணக்குகள் பற்றிப் பேசலாம் எனப் புலிகள் வற்புறுத்துகின்றனர்.

இந்த நிலையை – 'அன்றாட, அடிப்படைப் பிரச்சினைகள் என ஒரு இராஜதந்திர வியூகத்தைப் போட்டுக்கொண்டு, தங்களது நலன்களை நிறைவு செய்யப் புலிகள் முயல்கின்றனர்' என்று சொல்வது பொருத்தமானது அல்ல. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பிரமாண்டமான மக்கள் பேரணி, இதே கோரிக்கையையே விடுத்துள்ளது. தமிழர்களின் பிரதிநிதிகளாய் நின்று, தமிழர்களின் அபிலாசைகளையே புலிகள் பிரதிபலிக்கின்றனர்.

இந்த நிலையைப் புரிந்துணர சந்திரிகா அம்மையார் அவர்கள் சற்று முயலவேண்டும். அதாவது – புலிகளின் கோரிக்கைகள் வலியுறுத்துபவை எல்லாமே, ஒட்டுமொத்தமாக, சந்திரிகா அரசின் "ஒரே நாடு – ஒரே அரசு – ஒரே மக்கள்"என்ற கொள்கைகளுக்கு அமைவானவையாகும். இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதானால் – சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளையெல்லாம், சிங்கள மக்கள் பெறுகின்ற சலுகைகளையெல்லாம், சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரங்களையெல்லாம் தமிழர்களுக்கும் தாருங்கள் என்பதாகும். இது நியாயமானது; சாலப் பொருத்தமானது.

இதேநேரத்தில், சமாதானத்தில் புலிகள் அதீத நாட்டம் கொண்டுள்ளனர்; மோதல் தவிர்ப்பை கண்ணியமான முறையில் அமுல்படுத்தி வருகின்றனர்; கண்காணிப்புக் குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்தித்து தலைவர் உறுதியளித்திருக்கின்றார்; தலைவரை வியந்துரைத்து, அவரின் சமாதான விருப்பை ஏற்றுக்கொண்டு, வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு கொழும்பில் கருத்தும் தெரிவித்துள்ளது.

புலிகளிடம் அமைதிக்கான விருப்பு இருக்கின்றது; சமாதானத்தை உருவாக்கும் நல்லெண்ணம் இருக்கின்றது: சமரச நிலையை மேம்படுத்த இதய சுத்தமாக அவர்கள் முனைவது தெரிகின்றது. ஆனால், இந்த நிலையை அரசியல் தீர்வு நோக்கி விரைந்து நகர்த்தவேண்டிய ஜனாதிபதி அவ்வாறு செய்வதில் பின்னடிக்கின்றார். அன்று – 'சமாதானப் பிரியை' போன்ற தோற்றப்பாடு ஒன்றை வெளியில் காட்டி ஆட்சி அமைத்தவர், இன்று – சாயம் வெளுத்து, 'யுத்தத்தில் வெல்வது' பற்றிப் பேசுகின்றார்.

படைகளின் கட்டளைப் பீடங்கள் மீள நிர்மாணிக்கப்பட்டன; பாதுகாப்பு அமைச்சின் கட்டமைப்பை விரிவாக்குவதற்காக, இடைநிலை அதிகாரிகள் பலர் மேல் நிலைத் தளபதிகளாக உயர்த்தப்பட்டனர்; படைக்கலக் கொள்வனவு ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டன; மேஜர் ஜெனரல் றொகான் தலுவத்தையின் கீழுள்ள வடபிராந்தியப் படையணியின் தலைமையகத்தை – புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள – கிளிநொச்சிக்கு மாற்ற கருத்திணக்கம் காணப்பட்டது; இப்போது கடற்படைக்கு புதிய கப்பல்கள் வாங்க ஆட்கள் போய்விட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக – சமாதானத்தின் பெயரால் ஜனாதிபதியான சந்திரிகா, சண்டைக்காக, கடந்த வருடத்தைவிட இவ்வருடம் 100 கோடி ரூபா அதிகமாக ஒதுக்கியுள்ளார். இத்தகைய இராணுவ சிந்தைக்குச் சிகரம் வைப்பதுபோல, பிரான்சின் லாமொண்ட் ஏட்டிற்கு அளித்த செவ்வியில் சந்திரிகா நேரடியாகச் சொல்லியுள்ளார் – "உறுதியான ஒரு அரசாலும் – ஆயுத பலங்கொண்ட இராணுவத்தாலும் போரை வெல்ல முடியும்" என்று.

சந்திரிகா அம்மையாரே! இது நல்லதல்ல. போர் முரசு கொட்டாதீர்கள். முன்னைய பேரினவாதத் தலைமைகள் செய்ததுபோல உங்களது அரசியல் நலனுக்காகவும் குறுகிய சிந்தனைகளுக்காகவும் அப்பாவி மக்களைப் பலியாக்காதீர்கள். புலிகளை வெல்லப் போகிறீர்களா? அது நடக்கக்கூடிய காரியமா? பேச்சு வார்த்தைக்கு உங்கள் ஆட்களைக் கைகுலுக்கி வரவேற்றது புலிகளின் 'பலம்'தான்; 'பயம்' என்று கருதிவிடாதீர்கள்.

இது ஒரு தனித்த இயக்கம் அல்ல – தோற்கடித்துப் பணியவைப்பதற்கு.

புலிகள் ஒரு தேசிய இனத்தின் – 'மக்கள் விடுதலை இயக்கம்'; மறந்து விடாதீர்கள்!

– தி. பரந்தாமன் ○



நல்லெண்ண நம்பிக்கை: மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுக்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை தலைவர் அவர்கள் சந்தித்தபோது.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்